73

சைவரஐஞ்டனை

உ.ரிணக்கம்

ACL-TNAL
00089

C

O23:417
N26
(48631)

1479

THE REGISTRAR OF BOOKS
29 MAR 1926
MADRAS

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவானுஷ்டான விளக்கம்.

மதுரை
ஸ்ரீமத் சுப்பிரமணிய தேசிகரவர்கள்
இயற்றியது.

மதுரை திருஞானசம்பந்த சுவாமிகளாதீன வித்வான்
சுந்தரலிங்கக்கவிராயரவர்கள் குமாரரும்,
ஸ்ரீகுமரன் திருவருட்சங்க அதிபருமாகிய
S. கலியாணசுந்தரம் பிள்ளையால்
மதுரை
மீனலோசனி அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

...தன ௵ மாசி௴

1926. [விலை அணா 6.

O23:417
N26
148631

REGISTRAR OF BOOKS
29 MAR 1926

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்.

# சைவானுஷ்டான விளக்கம்.

மதுரை
ஸ்ரீமத் சுப்பிரமணிய தேசிகரவர்கள்
இயற்றியது.

மதுரை திருஞானசம்பந்த சுவாமிகளாதீன வித்வான்
சுந்தரலிங்கக்கவிராயரவர்கள் குமாரரும்,
ஸ்ரீகுமரன் திருவருட்சங்க அதிபருமாகிய
**S. கலியாணசுந்தரம் பிள்ளையால்**

மதுரை
மீனலோசனி அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

குரோதன ௵ மாசிமீ

1926.

காப்பிரைட்.]

[விலை அணா 6.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# முகவுரை.

அநாதிமலமுத்த சுத்த சாட்குண்ய பரிபூரண ராய் ஆதிமத்தியாந்த சமானாதிகநாம ரூபகுணரகிதராய் விளங்காநின்ற சிவபெருமான் ஆன்மாக்கள் துணிந் துய்யும் பொருட்டு அருளிச்செய்த இருபத்தெட்டாகமங்களினுள் விரிந்துகிடக்கும் சரியை, கிரியை, யோக, ஞானப் பொருள்களைக் கற்றுணர்ந்த ஆன்றோர்களால் சுருக்கி பலபத்ததிகளாகக் கூறப்பட்டிருப்பினும் அதினுண்பொருள் தெரிந்து சாமான்ய பக்குவர் அனுட்டித்தலருமைநோக்கி அறிஞர்களால் சைவானுஷ்டான விதிகள் இயற்றப்பட்டு பலவெளிவந்தவைகளில் கிரியா விளக்கமும் அதததற்குரிய முத்திரைகளும் அவற்றின் பெயர்களும் காரணார்த்தங்களும் நுண்ணறிவுடையோர்க்கேயன்றி ஏனையோர்க்குப் பெரும்பான்மையும் விளங்காமையால் அன்பர்கள் வேண்டுதல் காரணமாக சித்தாந்தசாஸ்திரம் பதினான்கனுள் ஒன்றானதும் சந்தான குரவருள் ஒருவராகிய ஸ்ரீமத் உமாபதி சிவாசாரியார் அருளிச்செய்ததுமான சிவப்பிரகாசம் என்னும் நூலிற்கு உரையாசிரியரான மதுரை மேலமடம் ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் மரபிற்றோன்றிய சுப்பிரமணிய தேசிகரவர்களால் பத்ததிகளுக்குமாறுபடா

வண்ணம் மேற்சொல்லப்பட்டவைகளை யாவரும் எளி திலுணர்ந்து செய்துய்யுமாறு இரகசியார்த்தங்களும் உண்மைப் பொருளும் மெய்கண்ட சாஸ்திரங்களின் தெள்ளிய வாய்மைப் பொருளாயுள்ள அந்தரியாக பூசையும் தியானமும் நிஷ்டையும் சாலவிளக்கி சைவா னுஷ்டான விளக்கம் என்னும் இந்நூல் செய்யப் பட்டது.

அந்தரியாகபூசை தியான முதலானவைகள் விசேட, நிர்வாண தீக்ஷைபெற்று ஆசிரியர்மூலங்கேட்டு அனுட்டித்தல் வேண்டும்.

சமயப் பிரவேசமாகிய தீக்ஷைபெற்றே தேவார முதலான ஞானநூல்கள் ஓதவேண்டுதலின் ஆகமங்க ளிற்கூறியபடி சோடச கிரியைகளையும் முறையே அனுட்டித்தற்குரிய சைவசமய மரபிற்றோன்றிய ஒவ்வொருவரும் தவறாது ஆசிரியரையடைந்து சமய முதலான சிவதீக்ஷைபெற்று இதிற்கூறிய அனுட்டான விதிகளை நன்குணர்ந்து அவ்வாறு செய்துவருவதோடு தீக்ஷை பெறாதவர்களையும் பெறச்செய்து இந்நூல் விதிவழி அனுட்டித்துவருவான் தூண்டுமாறு வேண்டு கின்றேம்.

இங்ஙனம்,

**M. A. சிவசுப்பிரமணியம்,**

மதுரை.

உ

சிவமயம்.

# பதிப்புரை.

## தேவாரம்.

### திருச்சிற்றம்பலம்.

நார ணன்றொடு நான்முக னிந்திரன்
வார ணன்கும ரன்வணங் குங்கழற்
பூர ணன்றிருப் பூவணூர் மேவிய
கார ணன்னெனை யாளுடைக் காளையே.

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.

நெடிய கடல்சூழ்ந்த இந்நிலவுலகின்கண்ணே புண்ணியநாட்டில் தவஞ்செய் சாதியிலே சைவசமய மரபிலே பிறந்த ஒவ்வொருவரும் ஏழாம் வயதிலாவது ஒன்பதாம் வயதிலாவது சைவாசிரியரை யடைந்து சமயப்பிரவேசமாகிய சிவதீக்ஷைபெற்று காலந்தவறாது விதிப்படி விடாமல் மரணபரியந்தம் அனுட்டானஞ்

செய்துவரவேண்டும். இச் சிவதீக்ஷானுட்டானமும் ஆன்மகோடிகள் உய்தற்பொருட்டுக் கூறும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு சாதனங் களில் ஒழுகுவோர்க்கு இன்றியமையாது வேண்டப் படுவ தொன்றும். அநேகர் ஆயுள் முடிவுகாறுஞ் சிவ தீக்ஷை பெறாமலிருந்துகொண்டு நீர்க்குமிழிபோல் நிலையற்றழிந்துபோம் பொய்யுட லோம்புதற்பொருட்டு வாழ்நாளெல்லாம் வீணாளாகக்கழித்தும் தங்களைஉயர்ந் தோரென்றுஞ் சைவரென்றுஞ் சைவசமயி யென்றுஞ் சொல்லிக்கொள்வதற்கு ஒரு சிறிதுங் கூசுகின்றார்க ளில்லை. இச் சிவதீக்ஷானுஷ்டானத்தைக் கைக்கொள் ளாத எவரும் எக்காரணத்தாலுஞ் சைவசமயிகளாக மாட்டாரென்பது சிவாகமமுடிவும் ஆன்றோர் கொள் கையுமாம். இனி சிவதீக்ஷை பெற்றவருள்ளும் பெரும் பாலார் முறையோடு விதிப்படி அனுட்டானஞ் செய் யாது தீக்ஷை பெறாதவரைப்போலவே விபூதியை மாத்திரந்தரித்துக்கொள்வதும் அதனோடு மூலமந்திரத் தைமட்டுஞ் சிறிதுருச்செபித்துக்கொள்வதுமாகிவிட்

டனர். சிலர் அநுஷ்டானஞ் செய்வதற்குச் சோம்பி அநுஷ்டானக்கிரியை மகா வருத்தமுடையதென்றும் அதைச்செய்துமுடிப்பது அசாத்தியமென்றும் முறைப்படிசெய்யின் காலம் நீடிக்குமென்றுங் கூறுகின்றார்கள். இவர்கள் இவ்வாறுசொல்லி நழுவவிடுவதற்குக்காரணம் அன்பின்மையுஞ் சிரத்தையின்மையுமேயாம். ஒவ்வொருவரும் எழுவகைப்பிறப்பினுள்ளும் கிடைத்தற்கரிய இம்மானுடதேகம்பெற்ற அருமையினையும் அதுநீர்க்குமிழிபோல் நீங்கும் அவதியையுஞ் சிறிது உய்த்துணரின் தம் முயிர்க்குறுதி பயப்பதான சிவானந்தப் பெருவாழ் வைத்தரவல்ல இச் சிவதீக்ஷானுஷ்டானக் கிரியையின் பொருட்டு எவ்வளவு காலத்தையும் உபயோகப் படுத்துதல்கூடும். மேற்கூறிய சிவதீக்ஷானுஷ்டான விதி முதலியவைகளைப்பற்றி சிவாகமங்களினும் பத்ததிகளினும் விரித்துச் சொல்லியிருப்பினும் அவற்றைச்சுருக்கி சைவானுஷ்டானவிதியென்னும் புத்தகங்கள் பல வெளிவந்துள்ளன. அவைகளில் சமயதீக்ஷை யுடையோர்க்கேயன்றி ஏனையதீக்ஷை யுடையோர்க்குத் தெரிந்து

கொள்ளக் கூடாமையாலும் அச் சமயதீக்ஷை யுடையோரும், கிரியாவிளக்கமும், முத்திராபேதமும், அவற்றின் காரணார்த்தங்களும் உணர முடியாமையால் இப் புத்தகத்தில் சிவதீக்ஷைக்குரிய எல்லாவருக்குந் தாரும் சமயமுதல் நிருவாணம்வரை சிவதீக்ஷைபெற்ற அனைவரும் மிக எளிதாகத் தெரிந்துகொள்ளும்படி ஒவ்வொரு கிரியைகட்கும் முத்திரைகளும் பீஜாக்ஷரங் கூடிய மந்திரங்களும் அவற்றின் காரணங்களும் அங்கங்கே விளக்கியும் முறையாகத்தியானங்களும விசேஷ தர்ப்பண விவரங்களும் தேவாராதி அருட்பாக்களிற் சொல்லப்பட்ட அகப்பூசையாகிய மானத பூசையும் அதன் ஓமம், தியானம், நிட்டை முதலியனவும், சப்த கோடி மந்திரார்த்தங்களும், பஞ்சதீர்த்த விவரங்களும் இன்னும்சைவசமய அனுட்டானத்திற்குஇன்றியமையா அநேக முக்கியவிஷயங்களும் ஸ்ரீமத் சுப்பிரமணிய தேசிகரவர்களால் எழுதப்பெற்று அச்சிட்டிருப்பதால் இப்புத்தகத்துட் டோன்றுங் கிரியைகள் விரிவாய்க் காணப்படினும் வாசித்தறிந்து பழகியபின் சுலப

மாகச் சீக்கிரத்தில் செய்துமுடிக்கக்கூடுமாதலால் சைவானுஷ்டான விளக்கமென்னும் இந்நூலை சிவ தீக்ஷை பெற்ற சைவசமயிகளனைவரும்வாங்கி வாசித் துணர்ந்து அவ்வாறு செய்துவருவதோடு தீக்ஷை பெருதவர்களையும் அவசியம்பெறச்செய்யும்படி தூண்டு மாறு வேண்டுகின்றேன்.

இதிலேதேனும் வழுவுளதேல் அறிஞர்கள் தயை கூர்ந்து நூற்பிரமாணத்துடன் தெரிவிப்பார்களானல் அன்புடனேற்று அடுத்தபதிப்பில் வெளியிடக்கூடும்.

## தேவாரம்.

புரிகாலேநேசஞ்செய்யவிருந்தபுண்டரீகத்தாரும்
எரிகாலேமூன்றுமாகியிமையவர்தொழநின்றாரும்
தெரிகாலேமூன்றுசந்தியானித்துவணங்கநின்று
திரிகாலங்கண்டவெந்தைதிருச்செம்பொன்பள்ளியாரே.

S. கலியாணசுந்தரம்பிள்ளை,
மதுரை.

# அநுஷ்டானக்கிரியையின்
# விஷய அட்டவணை.

| | | பக்கம். |
|---|---|---|
| 1. | நித்தியகருமம் | 1 |
| 2. | திக்குநோக்கல் | 2 |
| 3. | பூமிசுத்தி | 3 |
| 4. | கணபதி, குருவந்தனம் | 4 |
| 5. | ஜலசுத்தி | 5 |
| | (க) நிரீக்ஷணம் | 5 |
| | (உ) புரோக்ஷணம் | 7 |
| | (ங) தாடனம் | 8 |
| | (ச) அப்யுக்ஷணம் | 8 |
| | (ரு) தாளத்திரயம் | 9 |
| | (சா) திக்குபந்தனம் | 9 |
| | (எ) அவகுண்டனம் | 9 |
| | (அ) தேனுமுத்திரை | 10 |
| 6. | ஜலப்புரோக்ஷணம் | 10 |
| 7. | அஸ்திரசந்தி | 10 |
| 8. | ஆசமனம் | 12 |

(க) அதரசுத்தி 14
(உ) அங்கஸ்பரிசம் 14
(ங) ஸ்தாநாதிபதிகளின் விளக்கம் 14
(ச) கரசோதனை 15
9. விபூதி சுத்தி 15
10. பஸ்மஸ்நானம் 18
11. மந்திரஸ்நானம் 20
12. ஆசமனம் 20
13. மானதஸ்நானம் 21
14. சகளீகரணம் 21
(க) கரசுத்தி 22
(உ) கரநியாசம் 22
(ங) அங்கநியாசம் 26
15. பிராணாயாமம் 28
16. சிவதீர்த்தகரணம் 34
17. சந்தியாத்தியானம் 35
(க) பிராமித்தியானம் 37
(உ) வைஷ்ணவித்தியானம் 38
(ங) இரௌத்திரித்தியானம் 39
(ச) துரியசந்தித்தியானம் 40

# விஷயஅட்டவணை.


| | | |
|---|---|---|
| 18. | மந்திராபிஷேகம் | 41 |
| 19. | மார்ச்சனம் | 41 |
| 20. | அகமர்ஷணம் | 42 |
| 21. | ஆசமனம் | 43 |
| 22. | சகளீகரணம் | 43 |
| 23. | கவசவேஷ்டனம் | 43 |
| 24. | சதாசிவத்தியானம் | 44 |
| 25. | காயத்திரிஜபம் | 46 |
| 26. | தர்ப்பணம் | 46 |
| 27. | ஆசமனம் | 47 |
| 28. | சகளீகரணம் | 47 |
| 29. | தீர்த்தோபசங்காரம் | 47 |
| 30. | சூரியோபஸ்தானம் | 47 |

விசேஷதர்ப்பணம்

மானதபூசையென்னும் தியானம் 52

தோத்திரம் 59

- தேவாரம் (௧) (௨)
- திருவாசகம் (௩) (௪)
- திருவிசைப்பா (௫)
- திருப்பல்லாண்டு (௬)
- பெரியபுராணம் (௭)

சிவமயம்.

## மந்திரங்களின் விவரம்.

கணபதி குருவந்தனம்:—ஓம் கெம் மகா கணபதயே நம: ஓம் ஹம் சிவகுருவே நம:

ஆசமன மந்திரம்:—ஓம்ஹாம் ஆத்துமதத்துவாய ஸ்வதா, ஓம் ஹீம் வித்தியாதத்துவாய ஸ்வதா, ஓம் ஹூம் சிவதத்துவாய ஸ்வதா. ஆக ௩.

பிரம்ம மந்திரம்:—ஓம் ஹோம் ஈசாநாய நம:,ஓம் ஹேம் தத்புருஷாய நம:, ஓம் ஹூம் அகோராய நம:, ஓம் ஹிம் வாமதேவாய நம:, ஓம் ஹம் சத்தியோஜாதாய நம: ஆக ரு.

அங்க மந்திரம்:—ஓம் ஹாம் இருதயாய நம:, ஓம் ஹீம் சிரசே நம:, ஓம் ஹூம் சிகாய நம:, ஓம் ஹைம் கவசாய நம:, ஓம் ஹௌம் நேத்திரேப்பியோ நம:,ஓம் ஹ: அஸ்திராய நம: ஆக சா. பிரம்ம மந்திரமும், அங்க மந்திரமுஞ் சேர்ந்தது சங்கிதாமந்திர மெனப்படும்.

சப்தகோடி மந்திரம்:—க. நம: = நமஸ்காரம் செய்தல், உ. ஸ்வதா = கொடுத்தல், ௩. ஸ்வாஹா = அழைத்தல், ச. வஷட் = விடுதல், ரு. ஹூம் = கட்டல், (சவனப்படல்) ௬. வௌஷட் = அசைவின்றியிருந்தல், எ. பட் = படுதல். மேற்கூறிய அர்த்தங்களும் இடம்பற்றிக் கொள்ளப்பெறும்.

கலா மந்திரம்:—ஓம் ஹ்லாம் நிவர்த்தி கலாயை நம:, ஓம் ஹ்வீம் பிரதிஷ்டா கலாயை நம:, ஓம் ஹ்ரூம் வித்தியாகலாயை நம:, ஓம் ஹைம் சாந்திகலாயை நம:, ஓம் ஹ: சாந்தியா தீதகலாயை நம: ஆக ரு.

பஞ்ச தீர்த்தம்:—தேவ தீர்த்தம், ஆரிடதீர்த்தம், மானவதீர்த்தம், பூததீர்த்தம், பிதிர்தீர்த்தம்.

தர்ப்பணம்:—தேவதர்ப்பணம், இருஷிதர்ப்பணம், மனுஷதர்ப்பணம், பஞ்சபூத தர்ப்பணம், தேவபிதிர் தர்ப்பணம், பிரேதபிதிர் தர்ப்பணம்.

## முத்திரைகளின் விவரம்.

கோகர்ண முத்திரை:—பெருவிரல் அடியில் சுட்டு விரலைமடக்கி மற்ற மூன்றுவிரல்களையும் நீட்டுவது.

சிகா முத்திரை:—இருகை நடுவிரல் மூன்றையும் முட்டியாகப் பிடிப்பது.

நமஸ்கார முத்திரை:—இருகையுங்கூப்பி பெருவிர லிரண்டும் பிணைந்திருப்பது.

பதாகை முத்திரை:—பெருவிரலைச்சேர்த்து நீட்டி சிறுவிரல் கீழிருப்பது. இதற்கு சம்மாரமுத்திரை யென்றும் பெயர்.

பரீக முத்திரை:—சிறுவிரலோடு பெருவிரலைச் சேர்த்து மற்ற மூன்றுவிரல்களில் சுட்டுவிரலுக்கும் அணிவிரலுக்கும்மேல் நடுவிரலை உயர்த்தி நீட்டுவது.

தத்தீக்ஷண முத்திரை:— ஐந்து விரல்களையும் நிமிர்த்தி புருவநடுவிற்கு நேராகக் கொண்டுபோய் கீழ் நோக்கிக் கவிழ்த்தல்.

அதோமுகிமுத்திரை:—சுட்டுவிரலை நீட்டி மற்ற விரல்களை மடக்கிக் கீழ்நோக்கிக் கவிழ்த்தல்.

சோஸ்திகமுத்திரை:—பெருவிரலை மடக்கி மற்ற விரல்களை நீட்டிக் கீழ்நோக்கிக் கவிழ்த்தல். இதற்கு நிரோதான முத்திரை என்றும் பெயர்.

கோவிஷாணமுத்திரை:—இடஉள்ளங்கையில் வலக்கைச் சுட்டுவிரல், நடுவிரல், அணிவிரல் மூன்றினாலும் மூன்றுதரம் அடிப்பது.

சோடிகாமுத்திரை:—வலக்கைச் சுட்டுவிரல் நுனியால் பெருவிரல் அடியைத் தொடுவது.

அதீக்ஷண முத்திரை:—வலக்கைச் சுட்டுவிரலை நீட்டிமற்றையவிரல்களைமடக்கி கீழ்நோக்கிப்பிடிப்பது.

தேனுமுத்திரை:—இருகரங்களையுங் கூட்டி பசுவின் முலைக்காம்புபோல விரல்களைப் பின்னிச் சேர்ப்பது.

கோமுகமுத்திரை:—வலக்கை நடுவிரல் முன்றையும் சேர்த்து மற்ற விரல்களை நிமிர்ப்பது.

உபயசங்க முத்திரை:—இருகைகளையும் விரித்து சுட்டுவிரலடியில் பெருவிரல் நுனிகளைச் சேர்ப்பது. இதற்கு ஆவாகனமுத்திரை என்றும் பெயர். இம்முத்திரையால் தார்ப்பிப்பது தேவதீர்த்தமெனப் பெயர்பெறும்.

திவ்யமுத்திரை:-அணிவிரல் நுனியையும் பெருவிரல் நுனியையுஞ் சேர்த்து மற்ற மூவிரலையும் நீட்டுவது.

சாமுத்திரை:—நடுவிரல் மூன்றுஞ்சேர்த்து மற்ற இருவிரலை நீட்டி கீழும் மேலும் நோக்குவது.

மிருகமுத்திரை:— அணிவிரலையும் பெருவிரலையுஞ் சேர்த்து துணையாக நடுவிரலையுஞ் சேர்த்து மற்ற விரலை நீட்டுவது.

திரிசூலமுத்திரை:—வலக்கை நடுவிரல் மூன்றையும் இடைவெளியிருக்கும்படி நீட்டுவது,

கும்பமுத்திரை:— இடஉள்ளங்கையில் வலக்கையை முட்டியாகப் பிடித்து வைப்பது.

ஆன்மலிங்கமுத்திரை:— வலக்கைப் பெருவிரலை நீட்டி மற்ற விரல்களைக் குறுக்காக நீட்டுவது.

சாணமுத்திரை:—வலக்கை நடுவிரல் மூன்றையுஞ் சேர்த்து மற்ற இருவிரலையும் நிமிர்ப்பது.

பிரசின்னமுத்திரை:—இருகாமுங்கூப்பி பெருவிரலிரண்டு முள்ளே மடக்குவது.

அதிஷ்டானமுத்திரை:—இருகைப் பெருவிரல்நுனிகளை அணிவிரல் அடியில் சேர்ப்பது.

உஷ்ணீகமுத்திரை:—பெருவிரல் அடியில் சுட்டு விரல் நுனிகளைச் சேர்ப்பது.

சின்மயமுத்திரை:—பெருவிரல் நுனிகளை சுட்டு விரல் நுனியில் சேர்ப்பது.

யோகமுத்திரை:—பெருவிரல் நுனிகளை நடுவிரல் நுனியில் சேர்ப்பது.

திவ்யமுத்திரை:—பெருவிரல் நுனிகளை அணி விரல் நுனியில் சேர்ப்பது.

ஆக்கிரமுத்திரை:—பெருவிரல் நுனிகளை சிறு விரல் நுனியில் சேர்ப்பது.

கடாமுத்திரை:—இருகை நடுவிரல் மூன்றையும் உள்ளே மடக்கி பெருவிரல் சிறுவிரல்களை நிமிர்ப்பது.

ஆக்கிரகண்ட முத்திரை:—வலக்கைச் சிறுவிரல் பெருவிரல்களை மடக்கி மற்ற விரல்களை நீட்டுவது.

நாராசமுத்திரை:— இருகை விரல்களை மடக்கி சுட்டுவிரல்களை நீட்டுவது.

உஷமுத்திரை:—இடக்கை அணிவிரலை வலவுள்ளங்கையிலும் வலக்கை அணிவிரலை இடவுள்ளங்கையிலுஞ் சேர்ப்பது.

மகாமுத்திரை:—இருகையையும் விரித்து சிரசுமுதல் இடுப்பளவு காட்டுவது.

வராகமுத்திரை:—வலக்கை நடுவிரலை மடக்கி சிறுவிரலை தனித்து நீட்டி மற்ற விரலைச் சேர்ப்பது.

அங்குசமுத்திரை:— வலக்கை அணிவிரல், சிறுவிரல், பெருவிரல்களை மடக்கி நடுவிரலை நீட்டி சுட்டுவிரலை துரட்டிபோல் வளைப்பது.

திரு முத்திரை:—இருகையையும் விரித்து விரல்களின் இடைவெளியில் தர்ப்பிப்பது. ஆரிடதீர்த்தம்.

கடாமுத்திரை:—இருகையையுங் கூட்டின சிறுவிரல் அடியில் தர்ப்பிப்பது. மானவதீர்த்தம்.

இராப்பணமுத்திரை:—இருகை மணிக்கட்டுகளின் அடியில் தர்ப்பிப்பது. பூததீர்த்தம்.

கண்டினமுத்திரை:—இருகைப்பெருவிரல் சுட்டுவிரல்களின் நடுவில் தர்ப்பிப்பது. பிதிர் தீர்த்தம்.

பிதிர்வம்சத்துக்கு வலக்கைப் பெருவிரல் நுனி கீழ்நோக்கியும் மாதாமகர்வம்சத்துக்கு இடக்கைப் பெருவிரல் நுனி கீழ்நோக்கியும் தர்ப்பிக்க.

## விரல்களின் பெயர்.

| கிரந்தச்சொல். | தமிழ்ச்சொல். | வழக்கச்சொல். |
| --- | --- | --- |
| அங்குஷ்டம் | பெருவிரல் | கட்டைவிரல் |
| தர்ச்சனி | சுட்டுவிரல் | ஆட்காட்டிவிரல் |
| மத்யமை | நடுவிரல் | பாம்புவிரல் |
| அனாமிகை | அணிவிரல் | மோதிரவிரல் |
| கனிஷ்டை | சிறுவிரல் | சுண்டுவிரல் |

## தேவாரம்.

போதன்போதனகண்ணனுமண்ணறன்
பாதந்தான்முடிநேடியபண்பாராய்
யாதுங்காண்பரிதாகியலந்தவர்
ஓதுநாமநமச்சிவாயவே.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

சிவப்பிரகாசகுரவே நம:

# சைவானுஷ்டானவிளக்கம்.

## நித்திய கருமம்.

சூரியனுதிக்க * ஐந்து நாழிகைக்குமுன் நித்திரை விட்டெழுந்திருந்து இரவில் சூக்குமசரீரத்தில் புசிக்க வேண்டிய கன்மமெல்லாங் கூட்டிப் புசிப்பித்த முறைமையும், பின்பு தூலதேகத்தில் புசிக்கவேண்டிய கன்மங்களுக்கு கலைமுதலிய தத்துவங்களைக் கர்த்தா கூட்டி புணர்த்துகின்ற முறைமையு முணர்ந்து சுகதுக்க நிவாரணை செய்துகொண்டு வெளியிற்சென்று கால், கை, முகம் சுத்திசெய்து விபூதி தரித்து புலித்தோல் முதலிய இயன்ற ஆசனத்தில் வடக்கு முகமாக சுகாச

---

*ஐந்து நாழிகைக்குமுன் எழுவது உத்தமம். மூன்றே முக்கால் நாழிகைக்கு முன் எழுவது மத்திமம். இரண்டரை நாழிகைக்கு முன் எழுவது அதமம்.

ணம் பொருந்தியிருந்து வியோமரூபிணிசத்தியின் வலக்கால் பெருவிரலிலிருந்து ஒழுகுகின்ற அமிர்தத்தால் ஸ்நானம் பண்ணினதாகப் பாவித்து சிவஞானி ஸோஹம்பாவனையும், சிவயோகி நாதவிந்துவையும், சிவகிரியாவான் சதாசிவமூர்த்தியையும், சிவசரியாவான் உருத்திரமூர்த்தியையும், குரு உபதேசப் பிரகாரம் தியானித்தும் இயன்றவரை மூலமந்திரத்தைச் செபித்தும் பின்பு சௌசம், தந்தசுத்தி முதலியவைகளை நூல்களிற் கூறியபிரகாரம் கிரமமாகச்செய்தும் ஸ்நானகட்டத்தையடைந்து ஜலத்தை பரமாமிர்தமாகவும் கங்கையாகவும் பாவித்து நிஷ்களரும் நின்மலரும் நித்தியமுத்தருமான சிவபெருமானைச் சிந்தித்து ஆசமனஞ்செய்து ஸ்நானம்பண்ணி சுத்தாசமன முடித்து ஈரந்துவட்டி தோய்த்துலர்ந்த சுத்தவஸ்திரமிரண்டு தரித்து சந்தியோர்பு ஸ்தானத்தை அடையவேண்டும்.

## திக்கு நோக்கல்.

முத்தியை விரும்புவோர் எக்காலமும் வடக்குமுகமாகவே அநுஷ்டானம், செபம், பூசை, தியானம்

முதலியவைகள் செய்யவேண்டும். முத்தியையருளுங் கடவுள் பசுக்களுக்குப்பாசம்நீங்கும்பொருட்டு தெக்ஷிணாபிமுகமாய் ஆசாரியமூர்த்தமாயிருந்து ஞானோபதேசஞ் செய்திருத்தலினால் அப்பெருமானை மறவாது அபிமுகமாயிருந்து கிரியைகள் செய்யவேண்டு மென்பது நூற்பிரமாணம். ஆகையால் உத்தராபிமுகமாகச் செய்யுங் கிரியைகள் ஞானக்கிரியாவதியாகும். தெக்ஷிணம்—தெற்கு உத்தரம்—வடக்கு அபிமுகம் — எதிர்நோக்கல்.

## பூமி சுத்தி.

கோகர்ணமுத்திரையால் ஜலமெடுத்து ஓம்சிவாஸ்திராய வித்மஹே, காலநாதாய தீமஹி. தன்னோ சஸ்திர பிரசோதயாத் என்று தான் உட்காருமிடத்தில் ஜலம் புரோக்ஷித்தல் பூமிசுத்தியாம். சுத்தி—குற்றம் நீக்கல்.

சிவாஸ்திரம் இச்சாஞான கிரியாசொரூபமாயிருப்பதாலும், பூமியைப் பராசத்தி ரூபமாய்ப் பாவித்தலாலும், அஸ்திரம் சுத்தியைத் தருவதாலும், அதனையுச்சரித்து நீரைத்தெளிக்கவே அத்தானம் சுத்தி யெய்து

மென்க. இவ்வாறு பூமிசுத்தி செய்தபின் வடக்குமுக மாக சுகாசனத்தில் உட்காரவேண்டும்.

## கணபதி, குருவந்தனம்.

சிகா முத்திரையால் ஓம்கெம்மகாகணபதயே நம: என்று சிரசினிரண்டு பாரிசத்திலும் மூன்றுதரம் குட்டிக்கொள்வது கணபதி வந்தனம்.

இது கபாலத்தினடியாயும் இலலாடத்தி னுளியா யுமுள்ள மத்தியநாடியாகிய சுஷும்ன நாடியில் அமிர்தம் ஒழுகும்படியாயும் விக்கினங்கள் சாந்தியா தற்பொருட்டும் பிரார்த்தித்தல். பாரிசம்—பக்கம்.

நமஸ்கார முத்திரையால் ஓம் ஹம் சிவகுருவே நம: வென்று புருவநடுவிற்குநேராக அஞ்சலிசெய்க.

இது ஆணவாதி மலநிவர்த்தி காரணமாக கோடி சந்திரப்பிரகாசமாயுள்ள சிவத்துவவிளக்க முண்டாதற் பொருட்டு தம்முதலே குருவாகச்சிந்தித்து சமஸ்த பாசங்களினின்றும் ஒழிந்து உமது கைங்கரியத்திற்கு அருட்டுணையாக வேண்டுமெனப் பிரார்த்தித்தல்.

குருவருள் முன்னின்றாலன்றி மலநீக்கமுதலியன சித்தியாவாகலான் குருவணக்கம் செய்யப்படுவதென்க. கு—மலம், ரு—நீக்குபவன். குருவென்பவன் மலத்தை நீக்கி சிவத்தை யருள்பவனெனப் பொருள்படும்.

## ஜலசுத்தி.

ஜலத்தில் நிரீக்ஷணம், புரோக்ஷணம், தாடனம், அப்புக்ஷணம், தாளத்திரயம், திக்குபந்தனம், அவகுண்டனம், தேனுமுத்திரை என்னும் எட்டுச் சுத்திகளுஞ் செய்வது அஷ்டசம்ஸ்காரம் என்று பெயர்.

இந்தச்சுத்திகளினால் ஜலம் சிவசத்திவடிவினதாகி மேற்செய்யுங்கிரியைகளுக்கு இன்றியமையாச் சாதனமாயிருக்குமென்க.

நிரீக்ஷணம்:—பதாகை முத்திரையால் ஜலத்தை ஓம் ஹ: அஸ்திராயபட் என்று வலமிடமாக மூன்று தரம் நீக்கி பின்பு,

பரீக முத்திரையால் ஓம் ஹாம் ஹௌம் சிவாய நம: வென்று வலக்கண், நெற்றிக்கண், இடக்கண் என்னும் மூன்றினாலும் அந்நீரைப்பார்ப்பது நிரீக்ஷணமாம்.

வலக்கண் ஆதித்திய மண்டலசொரூபமாயும் இச்சா சத்தியாயு மிருப்பதால் நுரை, குமிழி, புழு முதலிய ஜலத்திலுள்ள குற்றங்கள் நீங்கும் பொருட்டாகவும் நெற்றிக்கண் அக்கினி மண்டல சொரூபமாயும் ஞான சத்தியாயு மிருப்பதால் அந்நீர் எரிக்கப்பட்டதாகவும், இடக்கண் சந்திர மண்டல சொரூபமாயும் கிரியா சத்தியாயுமிருப்பதால் அமிர்தத்தால் முன் எரிக்கப்பட்ட ஜலத்தைத திரும்ப உண்டாக்குவதாகவும் பாவித்தல். (நீரீக்ஷணம்—பார்த்தல்.)

ஒரு தொழில் செய்யுமிடத்து மந்திரம், கிரியை, பாவனை மூன்ருனுஞ் செய்யப்படும். மந்திரம் அதி தேவதையை யுடையது. கிரியை முத்திரையால் செய்வது. பாவனை மனத்தால் நினைப்பது.

மனம், வாக்கு, காயம் மூன்றும் ஒன்றுபட்டு கிரியை செய்யவேண்டு மென இதனல் விளங்குகின்றது. முத்திரா என்னும் வடசொல் தேவரை மகிழ்வித்து இடுக்கண் செய்வோரைத் துரத்துதல் எனப் பொருள் படும். முத்—மகிழ்ச்சி. திரா—வேகமாய்ச் செல்லல்.

மந்திர முச்சரித்து முத்திரை காட்டவே அதற்குரிய அதிதேவதை பிரசன்னமாகிமகிழ்வுற்று கிரியைகளை முற்றச் செய்யும். இடுக்கண் செய்வோர்கள் அகல்வார்கள். மந்திரமும் முத்திரையும் இன்னகிரியை என்பதை புணர்த்தும், பாவனையாவது இது இவ்வாறு ஆயிற்றென மதித்தல். சூரியன், அக்கினி, சந்திரன் இம்மூன்றும் திரிசத்தி வடிவானபடியால் ஈசுவரனுக்கு இவை மூன்றும் நேத்திரங்களாகும். இவன் காரண சமஸ்காரத்தினாலே சிவ ரூபம் பெற்று விளங்கலால் இவனுக்கும் அவையே நேத்திரங்களாய் உபசார வழக்காய் விளங்கு மென்றுணர்க. காரண சமஸ்காரம்—தீக்ஷை.

புரோக்ஷணம்:—நிமிர்த்தியபதாகை முத்திரையால் ஓம் ஹ: அஸ்திராயபட் என்று விந்துத்தான பரியந்தம் கைத்தலத்தை உயர்த்தி அங்குள்ள அமிர்தம் ஓம் ஹாம் இருதயாய வௌஷட் என்று கைத்தலத்தில் வந்ததாகப் பாவித்து தகீ தீக்ஷணமுத்திரையால் ஓம் ஹௌம் சிவாயநம: வென்று ஜலத்தில் தெளித்தல் புரோக்ஷணமாம். நிரீக்ஷணஞ்செய்து சுத்தியடைந்த

நீரில் பரமாமிர்தமாகிய சிவதேஜஸ்கலந்ததாகப்பாவனை. சிவதேஜஸ் புருவநடுவில் வெண்மையான அமிர்தமய மாயிருக்கும். விந்துத்தானம் — புருவநடு. புரோக்ஷணம்—தெளித்தல்.

தாடனம்:—அதோமுகி முத்திரையால் ஓம் ஹ: அஸ்திராய உம்பட் என்று நீரில் தட்டி அதில் சிவசத்தியைப் பிரகாசிக்கச்செய்தல். தாடனம்—தட்டுதல்.

ஒருவன் கல்லை அடிக்கும்போது அதனிடத்து வியாபகமாயிருக்கும் அக்கினி பொறிவடிவாய் வெளிப்படுதல்போல சடமாகிய இந்தப்பதார்த்தத்தினிடத்து வியாபகமாயிருக்கும் சிவசத்தி இத்தாடனத்தினுல் பிரகாசமாகுமென்க.

அப்பியுக்ஷணம்:—சொஸ்திக முத்திரையால் ஓம் ஹௌம் கவசாய வௌசட் என்று நீரை மூடுதல். நீரிற் றோன்றிய சிவசத்திப் பிரகாசமானது அத்தானத்தை விட்டு அகலாதிருக்கும் பொருட்டு செய்யப்படுவது. அப்பியுக்ஷணம்—மூடுதல்.

தாளத்திரயம்:—கோவிஷாண முத்திரையால் ஓம் ஹ: அஸ்திராயபட் என்று மூன்றுதரமடிப்பது தாளத்திரயம். சிவசத்திப் பிரகாசத்திற்குத் தீங்கு விளைவிக்கச் செய்யும் அசத்துக்களை நீக்குவதினிமித்தம் செய்யப்படுவது.

திக்கு பந்தனம்:—சோடிகா முத்திரையால் ஓம் ஹ: அஸ்திராயபட் என்று கிழக்குத்திசை முதலான எட்டுத்திக்குகளிலும், ஆகாயத்திலும், பூமியிலும் தெறிப்பது. சிவசத்தியினது பொறி அக்கினி வடிவாய் மேற்கிழம்பி பத்துஇடங்களிலும்காவலாகத் தான்செய்யுங்கிரியைகளுக்கு விக்கினமுண்டாகாதிருக்கும்பொருட்டும், அமிர்தம் சர்வ வியாபகமானதால் எங்கும்பரவாமல் ஓரிடத்திலிருக்கும்படியாகவுஞ் செய்புங் கிரியை. பந்தனம்—கட்டுதல்

அவகுண்டனம்:—அதிதீக்ஷணமுத்திரையால் ஓம் ஹெம் கவசாய வெளஷட் என்று மூன்றுதரஞ் சுற்றுவது. நீரிலுண்டான சிவசத்திப் பிரகாசத்தைச் சூழ மதிலும், அகழியுமுண்டாக்குவது. அவகுண்டனம்—சுற்றுவது.

## தேனுமுத்திரை.

ஓம் ஹௌம் சிவாயவௌஷட் என்று தேனுமுத்திரை காட்ட நீரில் காமதேனுவின்பாலைப் பொழிந்ததாகவும், சிவசத்திக்கு அதனால் அபிஷேகமானதாகவும், பாவித்தல். இது பூதாமிர்தமாம். இவையெட்டும் அஷ்ட சமஸ்காரமென்றுபெயர்.

## ஜலப்புரோக்ஷணம்.

கோமுக முத்திரையால் ஓம் ஹ: அஸ்திராயவௌஷட் என்று ஜலத்துளியை சிரசில் மூன்றுதரம் தெளிக்க. அஸ்திரம் எல்லாவற்றையுஞ் சுட்டெரிக்கும் வல்லமையைப் பொருந்தியிருப்பதால் கன்ம சரீரத்தைச்சுட்டு ஞானசரீரத்தையடைந்தவனாகப்பாவித்தல்.

## அஸ்திரசந்தி.

சங்கமுத்திரையால் ஓம் ஹ: அஸ்திராயஸ்வாஹா என்று சூரியமண்டலத்தி லெழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்கு நீரினால்மூன்றுதரம் தர்ப்பணஞ்செய்து ஓம் சிவாஸ்திராய வித்மஹே காலகாதாய தீமஹி, தன்

ஞே, சஸ்திரபிரசோதயாத் என்று பத்துரு ஜெபித்து மீட்டுமொருதரம் ஓம் ஹ: அஸ்திராயஸ்வாஹா என்று தர்ப்பணம் செய்வது. அஸ்திரசந்தி. இது சுருக்கமாய்க் கூறப்பட்டுளது. ஆகமங்களில் பரக்கக்காணலாம்.

அஸ்திரம் பாவங்களை ஒழிக்குமாயுத மாகையால் பாவங்களை அழித்தல் காரணமாகச் செய்யுங்கிரியை சிவபெருமான் எங்கும் வியாபகராயும் நிஷ்களராயுமிருப்பினும் அடிமைகள் தம்மை வழிபட்டுய்யும் பொருட்டு அஷ்டமூர்த்தமா யெழுந்தருளி ஆன்மாக்கள்செய்யும் வழிபாடுகளைக் கொண்டருளுதல் அவரது பெருங்கருணையாம். தர்ப்பணமாவது மந்திரசகிதமான நீரை அவருக்களித்தல். தர்ப்பணஞ்செய்யவே அவர் மகிழ்வெய்தி அனுக்கிரகம் செய்வர். இவன்செய்த பாவங்கள் அனைத்தும் அழிந்தொழியும். ஒழியவே பந்தித்த கன்மமானது நீக்கமுறும். இது கன்மமல நீக்கத்திநிமித்தம் செய்யுங்கிரியை. தர்ப்பணம்—உவப்பித்தல். அஸ்திரசந்தி—அஸ்திரத்தை செவ்வையாகத் தியானித்தல் என்பதுபொருள்.

## ஆசமனம்.

கோகர்ண முத்திரையால் ஓம் ஹாம் அத்துமதத்துவாய ஸ்வதா, ஓம் ஹீம்வித்தியாதத்துவாயஸ்வதா, ஓம் ஹூம்சிவதத்துவாயஸ்வதா என்று உழுந்தமிழு நீரை மூன்றுதரம் பருகல் ஆசமனமாம்.

ஆசமனத்தால் அகர, உகர, மகர மென்னும் மூன்றக்கரங்களும் பிரீதியெய்தும். ஆன்மதத்துவம், வித்தியாதத்துவம், சிவதத்துவமென மூவகைத்தத்துவங்களுக்கும் பிரம்மா, விஷ்ணு, உருத்திரர் என்பவர்களதிபதிகளாவர். அவர்களால்வரும் கேடுகளை சுத்திசெய்வதே ஆசமனம் பிருதிவியாதி பூதம், ஐந்து சப்தாதி தன்மாத்திரை ஐந்து, வாக்காதி கன்மேந்திரியம் ஐந்து, சோத்திராதி ஞானேந்திரியம் ஐந்து, மனாதி அந்தக்கரணம் நான்கு ஆக உசம் ஆன்மதத்துவம். கலைமுதல் மாயை ஈறாக எ-ம் வித்தியாதத்துவம். சுத்தவித்தைமுதல் சிவம்வரை உள்ள ரு-ம் சிவதத்துவம். இவற்றில் சத்தி தத்துவம் மந்திரங்களினிருப்பிட மாதலாலும் சிவதத்துவம் லயத்தானமாதலாலும் இரண்டும் சுத்திசெய்யப்

படா. எனைய ௩௪ தத்துவங்களுமே சுத்தியெய்துவனவாம்.

தத்துவங்கள் சுத்தியுறுதலாவது ஆன்மாவினாலே ஜெனனங்கள் தோறும் செய்யப்பட்டு கட்டுண்டுகிடக்கும் சஞ்சித வினைகளை சிவசத்தியினாலே அழிக்கப்பட்டொழிதலால் ஆன்மாவிற்கும் அத்தத்துவங்களுக்கும் வினைகாரணமாயிருந்த தொடர்பொழிதல். அஃதொழியவே ஆன்மாதத்துவங்களிலுள்ள தனு, கரண, புவன போகங்களைச் சென்றடையாதெனவுணர்க.

மாயாமல நீக்கத்தின்பொருட்டு இவ்வாசமன கிரியையெனக் காண்க. ஸ்வதா என்னும் மந்திர உச்சரிப்பானது அதிதேவதை பிரசன்னமாகி தத்துவங்களை சுத்திசெய்தருளும். ஜலசுத்திவாயிலாக வெளிப்பட்டு நின்ற சிவசத்தி அஸ்திரசந்தி ஆசமனமாகிய இரண்டு கிரியைகளிலும் துணைக்காரணமாய் நின்று தன்வியாபகத்துளடங்கிய கன்மமலம் மாயாமலமென்னுமிருமலங்களையு மொழித்தனவாகு மென்க. ஆசமனம்—பருகல், ஸ்வ—தான், தா—கொடுப்பது. தானே கொடுப்பது என்பது ஸ்வதாவாகும்.

## அதர சுத்தி.

பதாகை முத்திரையால் ஓம் ஹ: அஸ்திராய பட் என்று உதடுகளிரண்டையும் வலமிடமாகத் துடைப்பதினால் கணபதி கந்தர் இருவரும்பிரீதியெய்துவார்கள்.

## அங்க ஸ்பரிசம்.

திவ்விய முத்திரையால் ஓம் ஹாம் இருதயாய வௌஷட் என்று நாடி, வலமூக்கு, இடமூக்கு, வலக்கண், இடக்கண், வலக்காது, இடக்காது, உந்தி, மார்பு, வலது தோள், இடது தோள், சிரசு என்னும் கஉ தானங்களையும் பரிசம் செய்க.

அத்தானங்களிலுள்ள அதிதேவதைகள்பிரசன்னமாகி அநுக்கிரகிப்பார்கள்.

## ஸ்தானாதிபதிகளின் விளக்கம்.

நாடிக்கு, கங்கை. நாசிக்கு, பிரணவம் பிராணவாயு. நேத்திரங்களுக்கு, சூரியன் சந்திரன். காதுகளுக்கு; உலோகபாலகர்கள். உந்திக்கு, பிரமா. மார்புக்கு, உருத்திரன். தோள்களுக்கு, இலக்ஷுமி சரஸ்வதி. சிரசு

க்கு, சிவம். வலக்கைப் பெருவிரலுக்கு, சுத்த சிவம். அணிவிரலுக்கு, அமிர்தகலை. அமிர்தமாகிய அருளோடு சேர்ந்த சிவத்தால் அங்கங்களைப்பரிசித்தமாத்திரத்தில் அதிதேவதைகளைப் பிரீதியடைவித்து பிரசன்னமாகச் செய்யுங் கிரியையெனக் காண்க. பரிசம்—தொடுதல். பிரசன்னம்—தாமதமின்றி உடன் வருதல். அனுக்கிரகம்—கொடுப்பது. தொடுமிடமென்பது—வழக்கச்சொல்.

## கரசோதனை.

சாணமுத்திரையால் ஓம் ஹ:சிவாஸ்திராய உம்பட் என்று கரங்களைத்துடைத்து, பிரசன்ன முத்திரையால் ஓம் ஹௌம் சத்தியாய வௌஷட் என்று புருவ நடுவிற்கு நேராக அஞ்சலிசெய்யவும். பசுகரணங்களாகிய கைகள் சிவாக்கினியால் தகிக்கப்பட்டு அமிர்தத்தால் மீள உண்டானதாகப் பாவிக்கவும்.

## விபூதிசுத்தி.

சுத்த வெண்ணிறமான விபூதியை மிருக முத்திரையால் மூலமந்திர முச்சரித்தெடுத்து நிரீக்ஷணம், புரோக்ஷணம், தாடனம், அப்புக்ஷணம் முதலிய

நான்கு சுத்திகளுஞ்செய்து விக்கின நிவர்த்தியின் பொருட்டு ஓம் ஹ: அஸ்திராயபட் என்று திவ்விய முத்திரையால் சிறிது விபூதியெடுத்து நிருதி திக்கில் தெறித்தல்வேண்டும். பின்பு பஞ்சகலாமந்திரம், சங்கிதாமந்திரங்களினாலும் அபிமந்திரித்தல் விதியாகும்.

இக்கலாசுத்தியினால் தத்துவம், புவனம், வன்னம், பதம், மந்திரம் என்னுமத்துவாக்களும் சுத்தியுறும். புவனம் பதத்திலும், பதம் தத்துவத்திலும், தத்துவம் மந்திரத்திலும், மந்திரம் அக்கரத்திலும், அக்கரம் கலையிலும் வியாப்பியப் பட்டிருப்பதினால் கலைகளால் சுத்தி செய்த மாத்திரம் அதனுள் வியாப்பியமாயிருக்கு மைந்து அத்துவாக்களும் தாமே சுத்தியுறுமென்க.

கலைகளின் பொருள் ஆன்மாக்களைப் பந்தத்தினின்றும் நிவர்த்தி செய்தலால் நிவர்த்தியெனப் பெயர் பெறும்.

பந்தநிவர்த்தியான ஆன்மாக்களைமீளப்பந்தத்தை நோக்காதபடி பிரதிஷ்டை செய்வதால் பிரதிஷ்டையெனப் பெயர்பெறும்.

அங்ஙனம் உறுதியடைந்த ஆன்மாக்களுக்கு அநுமான ஞானம் ஆகமஞானங்களைநீக்கி அநுபவ ஞானத்தை உண்டாக்குவதால் வித்தையெனப் பெயர்பெறும்.

ஆன்மாக்களுக்கு சங்கல்பம் விகல்பம் விருப்பு வெறுப்பு முதலிய துன்பங்களினின்றுஞ் சாந்தஞ்செய்தலால் சாந்தியெனப்பெயர்பெறும்.

அங்ஙனம் சாந்தமானதும் நீக்கமுறுவது சாந்தியதீதை யெனப் பெயர்பெறும்.

பஞ்சப்பிரமமந்திரத்தைச் சிறிதுவிளக்குதும்:—இறைவன் சிருஷ்டியாரம்பத்தில் உயிர்கண்மேல்வைத்த கருணையால் சதாசிவமூர்த்தியா யெழுந்தருளின அவதாரத்து பஞ்சவக்திரத்தினிடமாய் வேதாகமங்கள் தோன்றினமையாலும் மந்திரங்களெல்லாவற்றிற்கும் பிறப்பிடமானதாலும் அறிஞர்கள் ஈசானாதி பஞ்சப்பிரம மந்திரத்தைப் பிரதானமாகவைத்த நுட்பத்தினையு முணர்க. விபூதி கலைகளினால் அத்துவசுத்தியாய் சிவஐஸ்வரியங்களைப் பிரகாசிப்பித்தலால் விபூதியெனப்பெயர்பெறும். பின்பு தாளத்திரயம் திக்கு பந்தனம் அவகுண்டனம்

மகா முத்திரையுங்காட்டி திவ்விய முத்திரையால் ஓம் ஹ: அஸ்திராயபட் என்று விபூதியையெடுத்து சிரமுதல் பாத பரியந்தம் பூசுவது அமலஸ்நானம். அஃது ஆன்மாவைப் பந்தித்த ஆணவமலசத்தி கெட்டொழிதற் பொருட்டேயாம். விபூதி மகதைஸ்வரியமெனப் பெயர் பெறும். விபூதி பராசத்திவடிவம். அதிதேவதை பரசிவம்.

## பஸ்மஸ்நானம்.

மிருகமுத்திரையால் ஓம் ஹ: அஸ்திராயபட் என்று ஜலம்விட்டு ஓம்ஹெம் கவசாய வௌஷட்என்று குழைத்து முக்குறியாகத் தரித்தல் ஆணவம், கன்மம், மாயை யென்னும் மும்மலங்களும் நீங்குதற் கறிகுறியாம்.

சந்தான முறைப்படி தரித்தல்வேண்டும். தரிக்கும் விதம்: சிரசு, நெற்றி, மார்பு, நாபி, முழந்தாள்கள், புஜங்கள், முழங்கைகள், மணிக்கட்டுகள், விலாக்கள், முதுகு, கழுத்து, இப்பதினாறு தானங்களே. சனத்குமார சந்தானத்துக்குரியது.

இவற்றிற்கு அதிதேவர்கள்:—சிரசிற்குச் சிவம். நெற்றிக்கு மகேசுவரன். மார்புக்கு உருத்திரன். நாபிக்கு விஷ்ணு. முழந்தாள்களுக்கு பிரமா. புஜங்களுக்கு விநாயகர், கந்தர். முழங்கைகளுக்கு தேவேந்திரன், ஆதிசேஷன். மணிக்கட்டுகளுக்கு சரஸ்வதி, மகாலக்ஷுமி. விலாவிரண்டிற்கும் வாமாதி, சத்திகள். முதுகிற்கு பிரஜாபதி. கண்டத்திற்கு ஏகாதச ருத்திரர்கள். இத்தானங்களில் திரிசூல முத்திரையால் தரிக்க. அத்தானதிபர்கள் விபூதி தாரணத்தினுல் பிரசன்னமாகி மலபந்தத்தை நீக்குவர்.

விபூதிதரிக்குமிடத்து சிரசில் ஓம்ஹொம் ஈசானய நம: என்று ஒரு அங்குலமும், நெற்றியில் ஓம் ஹெம் தத் புருஷாய நம: என்று ஆறங்குலமும், மார்பில் ஓம் ஹும் அகோராய நம: என்று ஆறங்குலமும், நாபியில் ஓம் ஹிம்வாமதேவாய நம: என்று ஒரு அங்குலமும், முழந்தாள்களில் ஒரு அங்குலமும், புஜங்களில் ஆறங்குலமும், மற்றத்தானங்களில் ஒரு அங்குலமும், கண்டம் எவ்வளவு நீளமோ அவ்வளவு நீளமும்,

ஓம் ஹம் சத்தியோஜாதாயநம: என்றும் தரித்தல் வேண்டும். விலாக்களைநீக்கி காதிரண்டையுங் கொள்வதூ முண்டு.

## மந்திரஸ்நானம்.

ஓம் ஹெம் கவசாய நம: என்று கைகழுவி கும்ப முத்திரையாகப்பிடித்து பஞ்சப்பிரம மந்திரம் உச்ச ரித்து வௌசடந்த மூலத்தால் சிரசில் புரோக்ஷித்துக் கொள்ளவும். இது மலமாசுபற்றற அகலும்படி செய்யும் மந்திரஸ்நானமாம்.

இதுகாறும் கூறிப்போந்த அஸ்திர சந்தியோ பாசனம் ஆசமனம் பஸ்மஸ்நானமாகிய இவைகள் முறையே கன்மம், மாயை, ஆணவ மென்னும் மும்மல நீக்கத்தின் பொருட்டெனவுணர்க.

பின்னர் ஆன்மலிங்க முத்திரையால் ஓம் ஹ: அஸ் திராயபட் என்று வளைத்து ஓம் ஹாம் இருதயாய நம: என்று சிந்தினவிபூதி இருதயத்திலே வந்ததாகப் பாவித்து ஆசமனம் செய்க.

இந்த ஆசமனம் முன்செய்த தத்துவசுத்தி நன்கு நிலைபெறும்படி மீட்டும் சுத்திசெய்தலாம்.

## மானதஸ்நானம்.

மூலமந்திரத்தை நாதாந்தமாக உச்சரித்து விந்துத் தானத்திலிருந்து வியோமரூபிணிசத்தியின் வலக்காலினின்றெழுதும் அமிர்தப் பிரவாகத்தினால் உடல் முழுதும் நனைந்ததாகப்பாவித்தல் மானதஸ்நானமாம்.

இது மும்மலங்களும் நீங்கி ஆன்மாவும் தேகமும் பரிசுத்தமெய்தும்படி செய்யுங்கிரியை. அமிர்தம் பிரவாகிக்கும் வகையாவது பிராணாயாமத்தினாலே பிராணாதி வாயுக்களை அடக்கியிருந்துகொண்டு மூலாதாரமுதல் துவாதசாந்த பரியந்தம் மூலமந்திரத்தை யுச்சரித்து சிவத்தோடு இரண்டற நிற்குமிடத்து விந்துவானது க்ஷோபிக்கப்பட்டு அதிலிருந்து அமிர்தம் பிரவாகப்படுமெனவறிக. (மானதஸ்நானம்—மனத்தால் செய்யப்படும் ஸ்நானம்.)

## சகளீகரணம்.

சகளீகரணமாவது சிவசொரூபமாகப் பாவித்தல். முன்செய்தகிரியைகளினால் தனக்குள்ள மாயாசம்பந்த

வடிவம் ஒழிந்ததாகவும் சிவத்துவம் அடைந்ததாக வுங் கொள்ளுதலாம். (சகள × காணம்=சகளீ கரணம். சகள =உருவம், கரணம்=பாவித்தல்.)

## கரசுத்தி.

சாண முத்திரையால் ஓம் ஹ: சிவாஸ்திராய உம் பட் என்று காங்களைத்துடைத்து பிரசன்ன முத்திரை யால் ஓம் ஹௌம் சத்தியாய வௌஷட் என்று புருவ நடுவிற்கு நேராக அஞ்சலிசெய்யவும்.

பசுகரணங்களாகிய கைகள் சிவாக்கினியால் தகிக் கப்பட்டு அமிர்தத்தால் மீள உண்டாக்கப் பட்டதாகப் பாவித்தல்.

## கர நியாசம்.

சிவார்ச்சனைக்கு ஏதுவாகிய சத்திமயமும் சிவ மயமுமான இருகரங்களையுங்கூட்டி விரித்து பத்மாசன மாகப்பாவித்து அதில் சிவனை நியசித்து சிவவடிவாக்கல் கரந்நியாசம். (நியசித்தல்—தொடுதல்.)

கிரகஸ்தன் சிருஷ்டி நியாசமும், பிரம்மசாரி திதி நியாசமும், வானப்பிரஸ்தனும் சந்நியாசியும், சங்கார

நியாசமும் பண்ணுவது முறை. அதில் இந்நியாசம் சிருஷ்டிக்கிரமமாம்.

சத்தி சிவவடிவினதாய் விளங்கும். இருகரங்களை யும் குவித்தவிடத்து அங்குட்டங்களொழிந்த மற்ற எட்டு விரல்களும் எட்டிதழ்த்தாமரை வடிவினதாகவும் மத்தியிலிருக்கும் அங்குட்டவிரல் அக்கமலத்தின் பொகுட்டு வடிவாகவும் பாவிக்கப்படும்.

குவித்த இருகரங்களில் அதிஷ்டான முத்திரை யால் ஓம் ஹாம் சிவாசனாய நம: என்று நியசித்தல். சிவனுக்கு மந்திராசனமமைத்தல். அதிஷ்டான முத்தி ரையால் ஓம் ஹாம் ஹௌம் சிவமூர்த்தயே நம: என்று நியசித்தல். சிவமூர்த்தியை யெழுந்தருளச் செய்வது. மந்திராசனமாவது பீடத்தினடியில் கூர்மாசனமும் மேல் ஆதாரசத்தியும் மேல் அனந்தாதி நாகாசனமும் மேல் தர்மாதி சிம்மாசனமும், மேல் கிரேதாதி யோகா சனமும், மேல் பத்மாசனமுமாம். பத்மாசனத்தின் கிரமம் பிருதிவிதத்துவம் கிழங்கு அப்பு தத்துவமுதல் சித்ததத்துவம் வரையுள்ள (உரு) தத்துவங்களும் எண்

விரலளவுள்ள நீலநிறம்போன்ற நாளம். பிரகிருதி நாளத்திற்கும் மலருக்கு மிடையேயுள்ள கிரந்திவடிவம். அசுத்தமாயை அடி இதழ். சுத்தமாயை மேலிதழ். வித்தியாதத்துவம் எ-ம் சுத்த வித்தியாதத்துவமும் ஆக அ-ம் எட்டிதழ் வடிவம். எட்டிதழிலும் அனந்தாதிகள் எண்மரும் வாமாதி எண்மரும் தளங்களிற் பொருந்தியிருப்பவர்களாயும் ஈசுவர சதாசிவ தத்துவமிரண்டும் பொகுட்டுவடிவம். அறுபத்துநான்கு கலைகளும் கேசரங்கள். 51 அக்கரங்களும் விதை. சத்தி தத்துவம் பொகுட்டின் விருத்தம். சிவதத்துவம் விருத்தபீடம். தளாக்கிரத்தில் சூரிய மண்டலமும், பிரமாவும். கேசராக்கிரத்தில் சோமமண்டலமும், விஷ்ணுவும் கர்ணிகாக்கிரத்தில் அக்கினிமண்டலமும், உருத்திரனும். கர்ணிகாமத்தியில் சத்திமண்டலமும் ஈசுவரனும். இப்படி விமலாசனம். ஆதாரசத்திமுதல் விமலாசன மீறாகவுள்ளன மந்திராசன மெனப்படும். இவற்றின் மீது தேஜோரூபமாய் தண்டாகாரமாய் பரவிந்து வியாபகமாயுள்ள சிவமூர்த்தியைத் தியானிக்க.

உஷ்ணீக முத்திரையால் ஓம் ஹோம் ஈசாநாய நம: என்றும் சின்மயமுத்திரையால் ஓம்ஹேம் தத்புருஷாய நம: என்றும் யோகமுத்திரையால் ஓம்ஹும் அகோராய நம: என்றும், திவ்ய முத்திரையால் ஓம் ஹிம்வாமதேவாய நம: என்றும், ஆக்கிர முத்திரையால் ஓம் ஹம் சத்தியோஜாதாய நம: என்றும் நியசிக்க. சிவபெருமானுக்கு ரு திருமுகங்களுண்டானதாகப் பாவிக்க.

அதிஷ்டான முத்திரையால் ஓம் ஹாம் ஹௌம் வித்தியாதேகாய நம: என்று நியசிக்க. கடாமுத்திரையால் ஓம் ஹௌம் நேத்திரத்திரயாய வௌஷட் என்று ஐந்து திருமுகங்களிலும் சர்வக்ஞதைக்கு ஏதுவாயும் இச்சாஞான கிரியாரூபமா யிருப்பதாகச் சிந்தித்து நியசிக்க.

அதிஷ்டான முத்திரையால் ஓம் ஹாம் ஹௌம் ஹாம் சிவாய நம: என்று நியசிப்பது. சிவம் சர்வகர்த்திருத்துவ முடையவரும், நிஷ்களரும், விபுவும், ஞானாநந்த ஸ்வரூப முடையவருமாகத் தியானிக்க.

1ல8631

ஆக்கிரமுத்திரையால் சிவ இருதயாய நம: என்றும் திவ்விய முத்திரையால் சிவசிரசேஸ்வாஹா என்றும் யோகமுத்திரையால் சிவசிகாய வௌஷட் என்றும் சின்மயமுத்திரையால் சிவகவசாய உம் என்றும் சோடிகா முத்திரையால் சிவாஸ்திராயபட் என்றும் ஆன்மலிங்க முத்திரையால் கவசாய உம் என்று அவகுண்டனமும், நமஸ்கார முத்திரையால் ஓம் ஹௌம் சிவாய வௌஷட் என்று பரமீகரணமுஞ்செய்க.

இந்நியாசத்தால் சிவபெருமானுக்கு அவயவங்களும் திக்கு பந்தனத்தால் சூழ மதிலும் பரமீகரணத்தால் மந்திரமனைத்தும் ஏகீபாவம் செய்தலாம் சிவகைங்கரியத்திற்கு முன்னர் காநியாசவிதி கூறப்பட்டது. ஏகீபாவம் பரமீகரணம் ஒரு பொருட்சொற்கள்.

## அங்க நியாசம்.

நிமிர்த்திய பதாகைமுத்திரையால் ஓம் ஹ:சிவாஸ்திராய உம்பட் என்று பாதமுதல் சிரசு பரியந்தம் துடைத்தலால் சரீரத்தைத் தகித்ததற்குச் சமான

மாகும். நமஸ்கார முத்திரையால் ஓம் ஹௌம் சத்தி யாய வௌஷட் என்று புருவநடுவிற்கு நேராக அஞ்சலி செய்யவும். முன் தகிக்கப்பட்டசரீரம் அமிர்தத்தால் மீட்டுமுண்டாக்கப்பட்டதாகும்.

திவ்விய முத்திரையால் இருதயத்தில் ஓம் ஹாம் சிவாசனாய நம:ஓம் ஹாம் ஹௌம் சிவமூர்த்தயே நம: என்று நியசிப்பது. மந்திராசனத்தின் மீது மூர்த்தியை யெழுந்தருளச் செய்வதாம். உஷ்ணீக முத்திரையால் ஓம் ஹோம் ஈசானமூர்த்தயே நம: என்றும், சின்மயமுத்திரையால் ஓம் ஹைம் தத்புருஷ வக்திராய நம: என்றும், யோகமுத்திரையால் ஓம் ஹூம் அகோர இருதயாய நம: என்றும், திவ்வியமுத்திரையால் ஓம் ஹிம் வாமதேவகுஹ்யாய நம: என்றும், ஆக்கிரமுத்திரையால் ஓம் ஹம் சத்தியோஜாத பாதாய நம: என்றும், திவ்வியமுத்திரையால் இருதயத்தில் ஓம் ஹாம் ஹௌம் வித்தியாதேகாய நம: என்றும், ஆக்கிரகண்ட முத்திரையால் ஓம் ஹௌம் நேத்திரத்திரயாய வௌஷட் என்றும், திவ்விய முத்திரையால்

ஓம் ஹாம் ஹௌம் ஹம் சிவாய நம: என்றும், ஆக்கிர முத்திரையால் சிவ இருதயாய நம: என்றும், திவ்விய முத்திரையால் சிவசிரசேஸ்வாஹா என்றும், யோக முத்திரையால் சிவசிகாய வௌஷட் என்றும், நாராச முத்திரையால் சிவகவசாய உம் என்றும், உச முத்திரையால் சிவாஸ்திராயபட் என்றும், கோவிஷாண முத்திரையால் ஓம் ஹ: அஸ்திராயபட் என்று தாளத்திரயமும், சோடிகாமுத்திரையால் ஓம் ஹ: அஸ்திராயபட் என்று திக்குபந்தனமும், தீக்ஷணை முத்திரையால் ஓம் ஹைம் கவசாய வௌஷட் என்று அவகுண்டனமும், மகா முத்திரையால் ஓம் ஹௌம் சிவாய வௌஷட் என்று பரமீகரணமுஞ் செய்க.

மந்திராசனத்தின் மீது எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்கவயவங்களும், பிரகாசமும், அக்கினிக் கோட்டையும், சூழ மதிலும், பரமாமிர்தாபிஷேகமும் பண்ணினதாகப் பாவிக்கவும். ஏகீபாவம் — ஒருமையடைதல்— இரண்டறக்கலத்தல்.

## பிராணாயாமம்.

வலநாசியாகிய பிங்கலை நாடியினால் அகத்திலுள்ள அசுத்தவாயுவைப் புறத்தேகழித்தலாகிய இரேசகமும்,

இடநாசியாகிய இடாநாடியினுல் புறத்திலுள்ள சுத்த வாயுவை உள்ளே நிரப்புதலாகிய பூரகமுஞ்செய்து பூரித்தவாயுவை சுஷும்னாநாடியில் செலுத்தி கும்பகம்செய்தல் பிராணாயாமமெனப்படும். பிராணாயாமம்—பிராணனைத்தடுத்தல். இரேசகம்—விடுதல். பூரகம்—இழுத்தல். கும்பகம்—அடக்கல்.

இரேசக முதலியன மாத்திரை அளவுகொண்டு செய்யப்படுவனவாம். இரேசகம் 12 மாத்திரை. பூரகம் 16 மாத்திரை, கும்பகம் 24 மாத்திரை. இது அதமம். இதனை யிரட்டித்தல் மத்திமம். அதை யிரட்டித்தல் உத்தமமென யோகநூலுடையார் கூறுவார்கள்.

கும்பகமானது அகர்ப்பம், சகர்ப்பமென இருவகைப்படும். மந்திர தியானமில்லாதுசெய்வது அகர்ப்பம். மந்திர தியானத்தோடு செய்வது சகர்ப்பம்.

சிவதீக்ஷையுடையோர்கள் பன்னிருகலாப் பிராசாதம் சோடசகலாப்பிராசாதத்தோடு கூடிய இருஸ்வ, தீர்க்க, புலுத, சூக்ஷும, அதிசூக்ஷும, உச்சாரண மூலமந்திரத்தினுல் பிராணாயாமம் செய்தற்குரியராவர்.

விரிந்தமனதை ஒடுக்கி ஏகாக்கிர சித்தமுடையவனாகச் செய்தல்வேண்டும். பிரா—சிவஞானம், சா—கதி தா—கொடுப்பது எனவே சிவஞானமாகிய மோக்ஷத்தைத்தருவதென்பது பொருளாம். இந்த மந்திரம் குருமுகமாகவறிக.

இரண்டு காற்பெருவிரல் தொடங்கி இடுப்பளவு இரண்டு ரூபமாகவும் மேல் பிரமரந்திரம்வரை ஏகரூபமாகவும், இருதயம், கண்டம், தாலுமூலம், புருவநடு, பிரமரந்திரம், இந்த இடங்களில் இடை பிங்கலைகளுடன் கூடினதாகவும், உள்துளைகளுடன் கூடினதாகவுமுள்ள சுஷும்ந நாடியை வாசஸ்தானமாயுமுடைய வியோமரூபிணி என்னும் சத்தி துவாதசாந்த முதல் மூலாதாரம்வரை வியாபித்திருக்கும். அச்சத்தி பேதம் வருமாறு:

கோஷகலை:—ஆகிருதி, ஹ மூலாதாரந் தொடங்கி நாபி பரியந்தம் வியாபகம் அங்குலம் 12. ஒளி-மின்னல். தேவதை விநாயகன். (சுரவர்ஜிதம்.)

மேதாகலை:—நாபிமுதல் இருதயபரியந்தம் வியாபகம் அங்குலம் 12 மாத்திரை மூன்று. ஆகிருதி அகா

ரம் பூதம் 5. தன்மாத்திரை 5. கன்மேந்திரியம் 5. ஞானேந்திரியம் 5. கரணம் 4 ஆக தத்துவம் 24. ஒளி—அக்கினிப்பிரகாசம். தேவதை பிரமா.

அர்க்கீசகலை:—இருதயமுதல் கண்ட பரியந்தம் வியாபகம் அங்குலம் 6 மாத்திரை இரண்டு. ஆகிருதி உகாரம் வித்தை-கலை. நியதி-காலம். இராகம் புருஷன் ஆக தத்துவம் 6. ஒளி-சந்திரப் பிரகாசம். தேவதை-விஷ்ணு.

விஷகலை:—கண்ட முதல் தாலுமூல பரியந்தம் வியாபகம் அங்குலம் 4 மாத்திரை ஒன்று. ஆகிருதி மகாரம் அசுத்தமாயாதத்துவம். ஒளி—மின்னல் சூனியம் தேவதை-உருத்திரன்.

விந்துகலை:——தாலுமூல முதல் புருவநடு பரியந்தம் வியாபகம் அங்குலம் 3 மாத்திரை அரை. ஆகிருதி வட்டம் சுத்தவித்தை ஈசுவரமாகிய இரண்டு தத்துவம். ஒளி—தீபப்பிரகாசம். தேவதை—மகேசுவரன்.

அர்த்தசந்திரகலை:—புருவ நடுவிற்குமேல் வியாபகம் அங்குலம் 3 மாத்திரை கால். ஆகிருதி அர்த்த

சந்திரன் சதாசிவ தத்துவம். ஒளி—பால். தேவதை—சதாசிவம்.

நிரோதிகலை:—முன் சொன்ன அங்குலத்திற்கு மேல் வியாபகம் அங்குலம் 2 மாத்திரை அரைக்கால். ஆகிருதி முக்கோணம் சதாசிவ தத்துவம். ஒளி-புகை சூனியம். தேவதை—சதாசிவம்.

நாதகலை:—முன்சொன்ன அங்குலத்திற்கு மேல் வியாபகம் அங்குலம் 3 மாத்திரை மாகாணி. ஆகிருதி கலப்பை இருபக்கம் சுழி சதாசிவ தத்துவம். ஒளி—மாணிக்கம். தேவதை—சதாசிவம்.

நாதாந்தகலை:—முன் சொன்ன அங்குலத்திற்கு மேல் பிரமரந்திர பரியந்தம் வியாபகம் அங்குலம் 3 மாத்திரை பத்து முந்திரி. ஆகிருதி கலப்பை வலப் பக்கம் சுழி—சதாசிவ தத்துவம். ஒளி—நக்ஷத்திரப் பிரகாசம். தேவதை—சதாசிவம்.

சத்திகலை:—பிரமரந்திரத்திற்கு மேல் வியாபகம் அங்குலம் 1 மாத்திரை ஐந்து முந்திரி. ஆகிருதி கலப்பை இடப்பக்கம் சுழி சத்திதத்துவம் ஒளி—சூரியப்பிரகாசம், சூனியம். தேவதை—அதிகாரசிவம்.

வியாபினிகலை:—முன்சொன்ன அங்குலத்திற்கு மேல் வியாபகம் அங்குலம் 3 மாத்திரை இரண்டரை முந்திரி. ஆகிருதி சூலம்—வலப்பக்கம். சுழி—சத்தி தத்துவம். ஒளி—நூறு சூரியப்பிரகாசம். சூனியம். தேவதை—அதிகாரசிவம்.

வியோமரூபிணிகலை:—ஆகிருதி வட்டம் ஒளி-ஆகாயம். அனந்தகலை:—ஆகிருதி வட்டம். ஒளி-ஆகாயம். அனுகதகலை ஆகிருதி வட்டம். ஒளி—கண்ணாடி. அனுசிருதகலை ஆகிருதி வட்டம். ஒளி—கண்ணாடி.

சமனுகலை:—முன்சொன்ன அங்குலத்திற்குமேல் வியாபகம் அங்குலம் 4 மாத்திரை ஒன்றேகால் முந்திரி. ஆகிருதி இரண்டு ரேகை. இருபக்கமும் சுழி. சிவ தத்துவம். ஒளி-ஆயிரஞ் சூரியப்பிரகாசம், சூனியம். தேவதை—போகசிவம்.

உன்மனுகலை:—முன்சொன்ன அங்குலத்திற்கு மேல் துவாதசாந்த பரியந்தம் வியாபகம் அங்குலம் 4. மனமாத்திரை ஆகிருதி குடிலை சிவதத்துவம். ஒளி—கோடிசூரியப்பிரகாசம், சூனியம். தேவதை—இலய சிவம்.

மேற்கூறிய அதிபர்களில் பிரமாதி சதாசிவ பரி யந்தமுள்ள காரணேஸ்வரர்களால்வரும் குணகுணங் களை ரேசகத்தால் நாசம்பண்ணி பூரகத்தால் சிவபுண் ணியத்தைப்பெற்று கும்பகத்தால் இலயசிவனிடத்தில் ஆன்மாவை யடையச்செய்து சிவவியாபகத்தில் ஆன் மாவியாப்பியப் பொருளென உணர்த்துவது பிராணா யாமமெனப்படும். இதற்கு வராக முத்திரையாற்செய்க. ஆகிருதி—வடிவம்.

இரேசக முதலியன செய்தவிடத் துண்டாகிய மலினங்கள் அகலும்படி வலச்செவியை மூலமந்திர முச்சரித்து பதாகை முத்திரையாற் பொத்துக. மலினம் —குற்றம்.

## சிவதீர்த்தகரணம்.

அங்குச முத்திரையால் ஓம் ஹாம் இருதயாய வௌசட் என்று புருவநடுவிலுள்ள அமிர்தத்தை எடு த்து ஜலத்தில்வைத்து பதாகை முத்திரையால் மூடி மூலத்தாலபிமந்திரித்து திக்குபந்தனம், அவகுண்டனம், தேனுமுத்திரை கொடுக்க.

மந்திராபிஷேக முதலிய கிரியைகளுக்குப் பின்னுதவுமாறு நீரை அமிர்தமயமாகவும் சிவரூபமாகவும் பாவித்தல். சிவதீர்த்த கரணமாம்.

## சந்தியாத் தியானம்.

பிராதக்காலமுதல் நான்கு காலங்களிலும் சிவசத்திகளை இருதயமுதலிய தானங்களில் தியானம் செய்க. அக்கினியில் சூடுபோல சிவத்தோடு அபின்னமாய் சகலகரும சாக்ஷிணியாயிருக்குஞ் சிவசத்தி சந்தியையெனப் பெயர்பெறும். அச்சிவசத்தி அபரை, பராபரை, பரையென முத்திறப்படும்.

அபரை—பிராமி, வைஷ்ணவி, இரௌத்திரி என மூவகைச் சத்திகளாகும். பிராமி நூறுகோடி யோசனை அளவுள்ள இரத்த மண்டலத்தில் சகலலோகங்களையும் சிருஷ்டிப்பவளாக விளங்குவாள். வைஷ்ணவி இருநூறுகோடி யோசனை அளவுள்ள சுவேதமண்டலத்தில் சகலலோகங்களையும் காப்பவளாக விளங்குவாள். இரௌத்திரி முந்நூறுகோடி யோசனை அளவுள்ள விந்துமண்டலத்தில் சகலலோகங்களையும் சங்கரிப்பவளாக விளங்குவாள்.

பராபரை—ஞானசத்தி, கிரியாசத்தி, இச்சாசத்தி யென மூன்று சத்திகளாய்ப் பிரிந்திருக்கும். பரை—இரத்தை, சுக்கிலை, அசிதை, கிருஷ்ணை யென நான்கு சத்திகளாவர்.

சமயி * பிராதக்காலத்தில் பிராமியை இருதயத்தில் தியானம்செய்க. புத்திரன் பிராதக்காலத்தில் பிராமியையும் மத்தியான காலத்தில் வைஷ்ணவியை புருவ நடுவிலும் சாயங்காலத்தில் இரௌத்திரியைப் பிரமரந்திரத்திலுந் தியானிக்க. சாதகாசாரியன் மூன்று சந்திகளிலும் ஞானசத்தி, கிரியாசத்தி, இச்சாசத்தி யெனு

---

* சமயி=சமய தீக்ஷையை யுடையவன். புத்திரன்=விசேஷ தீக்ஷையை யுடையவன். சாதகாசாரியன்=சிகாச்சேதமன்றி நிர்வாணதீக்ஷை பெற்றிருப்போன். உலோகதர்மணி தீக்ஷிதன் எனவும் பெயர்பெறுவன். சிவதர்மணி தீக்ஷிதன்=சிகாச் சேதத்தோடு கூடிய நிர்வாண தீக்ஷை பெற்றவன். ஆசாரியன்=சமயம், விசேஷம், நிர்வாணம், ஆசாரியபிஷேகம் பெற்றிருப்பதோடு சரியை, கிரியை, யோகம், ஞானத்தை யடைந்திருப்போன்.

மூவரையுந் தியானம்செய்க. சிவதர்மணி தீக்ஷிதன் மூன்றுசந்திகளிலும் இரத்தை, சுக்கிலை, அசிதை யெனும் மூன்று சத்திகளையுந் தியானித்திடுக. ஆசாரியன் சந்தி நான்கிலும் இருதயமுதல் துவாதசாந்த மீறுகிய தானங்களில் இரத்தை, சுக்கிலை, அசிதை, கிருஷ்ணை இந்நால்வரையும் தியானிக்கற்பாலன. சம் = செவ்வே. தியா = தியானித்தல். செவ்வையாகத் தியானிக்கப்படுவது சந்தியாத்தியான மென்பதாம்.

## பிராமித் தியானம்.

இனியிதயத் துடுவிளங்கும் பிராதக்கா லையினி
லெகினவா கனபதுமா சனவாலைப் பருவப்
புனிதவுப வீதபிரா மியைச்சிவந்த வடிவிற்
பூடணரத் தாம்பரையாச் சடையுமுடை யவளாய்
மணியசிருக் கக்கவடம் வலமிடந்தண் டங்க
மண்டலங்கை நான்குமுக நான்கிலிரு நான்காங்
குனிபுருவத் திருவிழியு முடையவளாய்ச் சத்வ
குணத்தினளாய்ச்சகலகன்ம சாக்ஷிணியாக்குறித்தே.

சந்தியாசத்திகளுள் பிராமியை அன்னவாகனத்தின்மீது பத்மாசனத்தைப் பொருந்தியிருப்பவளாய்ச்

சிவந்த நிறத்தையும் நான்கு முகமும், நான்கு கையும், எட்டுக்கண்ணும், சடையும், வலக்கை யிரண்டிலும் சிருக்கும், அக்ஷமாலையும், இடக்கை யிரண்டிலும், தண்டும், கமண்டலமுமுடையவளாய் பூணூலும், சிவந்த ஆபரணமும், சிவந்தபுடைவையுந் தரித்தவளாய் இளம் பருவமும் சத்துவகுணமு முடையவளாய்த் தியானிக்க.

## வைஷ்ணவித் தியானம்.

குறிகரும சாட்சிணியாய் ராசதையாய்ப் புள்ளூர்
கோகனகா சனையான தருணவை ணவியை
நெறிதருசுக் கிலநிறமுஞ் சுக்கிலவத் திரமு
நிறைபணியு முந்நூலுந் துளபமா லிகையும்
மறிவிழிக ளிரண்டுடைய திருவதன மொன்றும்
வலம்புரிச்சக் கரம்வாமந் தெக்கணந்தண் டபயம்
பொறையுடைய நாற்கரமு முடையவளா யிரண்டு
புருவநடு நினைந்துமத்தி யானநே ரத்தே.

வைஷ்ணவியை கருடவாகனத்தின் மேல் பத்மாசனத்தைப் பொருந்தி யிருப்பவளாய் வெண்ணிறமும், ஒருமுகமும், நான்குகைகளும், வலக்கையிரண்டிலும்

கதையும், அபயமும். இடக்கை யிரண்டிலும் சங்கு சக்கரமும் பூணூலும், வனமாலையும், வெண்புடவையுந் தரித்தவளாய் யௌவன பருவமும் இராசத குணமு முடையவளாய்த் தியானித்திடுக.

## இரௌத்திரித் தியானம்.

நேரிடப வாகனபத் மாசனருத் திரியை
நீணிறயௌ வனஞ்சற்றே திரும்புதா மதையா
யோர்பெருகு கரநான்கிற் சூலமக்கம் வலத்து
மிடத்தபயங்கதிர்வேலாங்கிளம்பிறைவேணியளாய்ப்
பார்வையொருமூன் றிலகுவதனமொன் றுள்ளவளாய்ப்
பலகரும சாக்ஷிணியா யத்தாத்த மனத்திற்
சார்பிரம ரந்திரத்தி னிணைந்துமூ வரையுந்
தரித்தகிருஷ்ண சனருமாய் நினைவர்சம யிகளே.

இரௌத்திரி இடபவாகனத்தின்மேல் பத்மாசனத்தைப் பொருந்தியிருப்பவளாய் நீல் நிறமும் ஒரு முகமும் இளம்பிறையையுடைய சடையும் திரிநேத்திரமும் நான்குகரமும் வலக்கரமிரண்டிலும் சூலமும் உருத்திராக்ஷமாலையும், இடக்கரமிரண்டிலும் அபயமும்

வேலும், யௌவனப் பருவமும் தாமதகுணமுமுடைய வளாய்த் தியானித்தல்வேண்டும்.

இம்மூன்றும் சகுணத்தியானம். ஞானசத்தி, கிரியாசத்தி, இச்சாசத்திகளை முறையே சூரியப்பிரகாசம், சந்திரப்பிரகாசம், அமிர்தப்பிரகாச நாதசொரூபமுமாகத்தியானித்தல் நிர்க்குணத்தியானமாம்.

## துரியசந்தித்தியானம்.

சமையிடுத் திரர்முதலோர் தாமரைநூல் போன்ற
தனுவுடையசெம்மைவெண்மைகருமைவருணிகளைச்
சமைதருமுச் சந்திகளின் மூன்றிடத்துந் துரியை
தனையுருவா யாதல்கருப் பாயாத னிசியி
லமைதரு துவாதசாந் தத்துமவ ரவர்க
ளதிகாரத் தினுக்கிசைய வவரவரைப் பாவித்
தமைதருமிவ் வகைசிவசத் திகளொளிமண் டலத்தி
லான்மாவுந் தனுவுமமைந் திடக்கருதிப் பின்னையே.

இரத்தையைப் பாலசூரியப் பிரகாசமாகவும்,சுக்கிலையைப் பூர்ணசந்திரப் பிரகாசம்போலவும்,அசிதையை அமிர்தம் போலவும், கிருஷ்ணையை ஸ்படிக நிறமாகவும் அறிவாற்றியானிக்க.

இங்ஙனம் அவ்வவர்க்குரிய காலங்களுக்கேற்ற சந்தியை யெனப்படும். சிவசத்திகளைத் தியானித்த பின்னர் அச்சத்திகளினுடைய வொளிமண்டலத்தில் ஆன்மாவும் சரீரமும் பொருந்தி அந்தர்ப்பவித்தன வாகச் சிந்தித்தல்வேண்டும். சிவனது அருள் சத்தி வியாபகத்துள் அத்துவிதமாகக் கலத்தலே சைவ சித்தாந்த முத்தி.

## மந்திராபிஷேகம்.

கையில்ஜலமெடுத்து கும்பமுத்திரையாகப்பிடித்து சங்கிதாமந்திரஞ் செபித்து வலக்கையில்வாங்கி சிரசில் வௌசடந்த மூலத்தால் தெளிக்க.

(தான்பெற்ற அருள் உறுதிப்படுமாறு சிவதீர்த்த வடிவினதாகிய அமிர்த கும்பத்தினால் அபிஷேகஞ் செய்துகொள்ளுதல் மந்திராபிஷேகமாம்.)

## மார்ச்சனம்.

கவிழ்த்திய பதாகை முத்திரையால் ஜலத்தைமூடி நமோந்த சங்கிதா மந்திரங்களினாலபிமந்திரித்து ஜலம் இடக்கையில்விட்டு விரல்கள் இடையில்விழுகிற ஜலத்

தை வௌஷடந்த சங்கிதா மந்திரங்களினுல் வலக்கை கோமுக முத்திரையால் சிரசில் புரோக்ஷிக்க. மார்ச் சனம்=சுத்தித்தல்.

இது தூலசரீர சம்பந்தமாய்வந்த தீவினைகளை ஒழித்தல் காரணமாகச் செய்வது. தூலசரீரமாவது பஞ்ச பூதபரிணுமமாய்வந்த உடம்பு.

## அகமர்ஷணம்.

இடக்கையிலிருந்த எஞ்சியஜலத்தை வலக்கையில் விட்டு வராகமுத்திரையால் நாசிக்குச்சமீபத்தில்பிடித்து வெண்மைநிறமுள்ள சுத்ததருமம் இடநாசிவழியே உட்புகுந்து அகத்திலுள்ள பாவத்தை ஒழித்ததாகவும் அப்பாவம் மைக்குழம்புபோல் வலநாசிவழியாய் வந்ததாகவும்பாவித்துகாலாக்கினிஉருத்திரர் வலக்கால்பெருவிரலில் சுவாலிக்கும் அக்கினியில் சங்க முத்திரையால் ஓம் ஹ: அஸ்திராய உம்பட் என்று புருவ நெரிப்புடன் விடுக. அப்படிவிடுதல், பாவம் அதில்விழுந்து பொடிபட் டொழிந்ததாகப் பாவித்தல்.

ஆகமர்ஷணம் = அகத்திலுள்ள பாவத்தை அழித்தல் சூக்ஷம சரீரத்தால்வந்த தீவினைகளை ஒழித்தல் காரணமாகச்செய்வது.

## ஆசமன சகளீகரணம்.

ஆசமன சகளீகரணஞ்செய்க. இது சூக்ஷம சரீரத்துக்குரிய தத்துவங்கள் சுத்தியாதற் பொருட்டும், அச்சரீரம் சிவரூபமாதற் பொருட்டும், தர்ப்பண கன்மத்துக்கு அங்கமாயுஞ் செய்யப்படுவது.

சூக்ஷம சரீரமாவது தன்மாத்திரை 5. கரணம் 3. ஆக எட்டினாலுமாக்கப்பட்ட வுடம்பு. இது சிருஷ்டி காலமுதல் சங்கார காலம்வரையில் வினைக்கீடாக எடுக்கும் பல தூலசரீரங்களுக்கு முதற்காரணமாயிருப்பது.

## கவசவேஷ்டனம்.

நிமிர்த்திய பதாகை முத்திரையால் ஜலங்கொண்டு ஓம் ஹௌம் கவசாய வௌஷட் என்று தன்னைவலமாகச் சுற்றுதல் தன்னைச்சுற்றி கோட்டையாக அக்கினி மதிலுண்டாக்குவதாம். (வேஷ்டனம் = சுற்றுதல்.)

## சதாசிவத்தியானம்.

உச்சிமுக மீசான மொளிதெளிய பளிங்கே
யுத்தராபூ ருவதிசையை நோக்கியுறு முகந்தே
நிச்சயித்த முகத்தின்கீழ்ப் பூர்வதிசை நோக்கி
நிகழுமுகந் தற்புருடங் கோங்கலர்போ னிறமே
யச்சுறுத்து மகோரமுக மறக்கரிது கராள
மவிழ்தாடி வலத்தோளிற் றென்னோக்கி யமருஞ்
செச்சைநிறத் தெறிவைமுக மிடத்தோண்மேல் வாமஞ்
சிறுபுறத்தின் முகஞ்சத்தி யோசாதந் திகழ்பால்.

திருவுருவந் தெளிபளிங்கு சடாமகுடத் திதழி
சிறுபிறைபு மூவைந்து திருநயனம் வலப்பாற்
கரதலத்திற் சத்திபவை யஞ்சூல நீண்ட
கட்டங்கந் தமருகமு மற்றையிடக் கரத்தின்
வரதமுமா துளங்கபலம் போகிசெப மாலை
மணமலிநீ லோற்பலமு முடையர்வய தீரெட்
டுருவிரட்டி யுறுப்பிரண்டு பதம்பதுமா தனந்தா
னுறவிருப்பர் சதாசிவந்தத் துவத்தவிசி னுகந்தே.

இதன்பொருள்—ஈசானமுகம் உச்சியில் ஈசான திசையைநோக்கி சுத்த பளிங்கு நிறம்போன்றும், தத்

புருஷமுகம் அதன்கீழ் கிழக்குநோக்கிக் கோங்கின் பூ நிறம் போன்றும், அகோரமுகம் வலத்தோள் மேல் தெற்குநோக்கி அவிழ்ந்ததாடியும் மிகுந்த கருப்பும் விருத்தாப்பியமும் பயங்கரமாகவும், வாமதேவமுகம் இடத்தோள்மேல் வடக்குநோக்கி ஸ்திரீகளுடைய முகம்போலச்சிவப்பாகவும், சத்தியோஜாதமுகம்மேற்கு நோக்கி பால்நிறமாகவும், சிறு குழந்தைமுகம் போன்றும் ஒவ்வொரு முகத்துக்கும் மூன்று கண்களாக பதினைந்துகண்களும், பாலசந்திரனையும் கொன்றைமாலிகையையுஞ்சூடிய ஜடாமகுடமும், கழுத்தின்கீழ் சுத்த பளிங்கு நிறம்போன்ற திருமேனியும், பத்துக்கையும், வலக்கை ஐந்திலும் வேல், அபயம், சூலம், மாத்திரைக்கோல், தமருகமும் இடக்கை ஐந்திலும், வரதம், மாதுளம்பழம், நாகம், ஜெபமாலை, நீலோற்பலமும் முப்பத்திரண்டுறுப்பும், இரண்டு பாதமும், பதினாறு வயதுடைய யௌவனமுமாய் பதுமாசனத்தி லெழுந்தருளியிருப்பவாராகத் தியானஞ்செய்து உன்மனாந்த அமனஸ்கரான சிவத்துக்கு ஆன்மா உடைமைப் பொருளாகப் பாவிக்க.

## காயத்திரிஜெபம்.

ஓம் தன்மஹேசாய வித்மஹே வாக்விசுத்தாய தீமஹி தன்னோ சிவ பிரசோதயாத் என்று பத்துரு ஜெபித்து மூன்றுதரம் சங்க முத்திரையால் அர்க்கியங் கொடுக்க.

## தர்ப்பணம்.

பவித்திரந்தரித்து ஸ்வாகாந்த சிவமூல மந்திரத்தினால் சங்கமுத்திரையால் மூன்றுதரம் தர்ப்பணஞ் செய்து பிராசாத மந்திரத்தை பத்துரு ஜெபித்து மூன்றுதரம் பிரதக்ஷணஞ்செய்து துவாதசாந்தோன்னத அஞ்சலிசெய்க. சங்க முத்திரையால் ஸ்வாஹாந்தமாக சங்கிதா மந்திரங்களுக்கும் ஸ்வாஹாந்தமாக தேவர்களுக்கும் திருமுத்திரையால் நமோந்தமாக இருடிகளுக்கும் கடா முத்திரையால் வஷடாந்தமாக மானிடர்களுக்கும் இராப்பணு முத்திரையால் வௌஷடாந்தமாக பூதங்களுக்கும் கண்டினமுத்திரையால் ஸ்வதாந்தமாக பிதுர்களுக்கும் உபயசங்க முத்திரையால் ஸ்வதாந்தமாக ஆசாரியர் முதலியோர்களுக்கும் தர்ப்பணம் செய்க.

தர்ப்பணம்—உவப்பித்தல். தர்ப்பணம் மந்திரம் முதலி யன பின்னர்க்காண்க.

## ஆசமன சகளீகரணம்.

ஆசமனம்—சகளீகரணம் செய்தல். தத்துவ சுத்தி யும் சிவரூப பாவனையும் நிலைபெறுதல் நிமித்தம் செய் வது.

## தீர்த்தோப சங்காரம்.

விந்துத்தானத்தி லிருந்தெடுத்து ஜலத்திவ்வைத்த அமிர்தத்தை சங்கார முத்திரையால் ஓம் ஹாம் இருத யாய உம் என்று எடுத்து ஒடுக்குதல். உபசங்காரம்— ஒடுக்குதல்.

## சூரியோபஸ்தானம்.

கைநிறைய ஜலமெடுத்து சிவமூலம் பத்துரு ஜெபித்து ஆதித்தமண்டல மத்தியில் விளங்கும் சிவ பெருமானிடத்தே கொடுக்க. உபஸ்தானம்—அடுத்தல், சார்தல்.

## விசேஷ தர்ப்பணம்.

## தேவகணம் (8)

ஓம் ஹாம் ஆதித்தியப்பிய ஸ்வாஹா, ஓம் ஹாம் வசுப்பிய ஸ்வாஹா, ஓம் ஹாம் ருத்திரேப்பிய ஸ்வா

ஹா, ஓம் ஹாம் விசுவேப்பிய ஸ்வாஹா, ஓம் ஹாம் சாத்தேப்பிய ஸ்வாஹா, ஓம் ஹாம் மருத்தப்பிய ஸ்வாஹா, ஓம் ஹாம் பிருகுப்பிய ஸ்வாஹா, ஓம் ஹாம் அங்கிரேப்பிய ஸ்வாஹா.

## இரிஷி (11)

ஓம் ஹாம் அத்ரயே நம:, ஓம் ஹாம் வசிஷ்டாய நம:, ஓம் ஹாம் புலஸ்தியாய நம:, ஓம் ஹாம் கிரதவே நம:, ஓம் ஹாம் பாரத்துவஜாய நம:, ஓம் ஹாம் விஸ்வாமித்திராய நம:, ஓம் ஹாம் பிரசேதசே நம:, ஓம் ஹாம் ரிச்சகாய நம:, ஓம் ஹாம் அகஸ்தியாய நம:,ஓம் ஹாம் ததீசயே நம:, ஓம் ஹாம் தூர்வாஸசே நம:.

## மானுஷர் (7)

ஓம் ஹாம் சனகாய வௌஷட், ஓம் ஹாம் சனந்தாய வௌஷட், ஓம் ஹாம் சனாதனாய வௌஷட், ஓம் ஹாம் சனத்குமாராய வௌஷட், ஓம் ஹாம் கபிலாய வௌஷட்,ஓம் ஹாம் பஞ்சசிகாய வௌஷட்,ஓம் ஹாம் இரஷபாய வௌஷட்.

## பூதம் (5)

ஓம் லம் பிருதிவிபூதாய வெளஷட், ஓம் வம் ஆப்பியபூதாய வெளஷட், ஓம் ரம் தேயுபூதாய வெளஷட், ஓம் யம் வாயுபூதாய வெளஷட், ஓம் ஹம் ஆகாயபூதாய வெளஷட்.

## தேவபித்ருேன் (9)

ஓம் ஹாம் கிரவ்விய வாகனாய ஸ்வதா, ஓம் ஹாம் அனலாய ஸ்வதா, ஓம் ஹாம் சோமபாய ஸ்வதா, ஓம் ஹாம் யமாய ஸ்வதா, ஓம் ஹாம் அர்யம்ணே ஸ்வதா, ஓம் ஹாம் அக்கினிஸ்பக்தாய ஸ்வதா, ஓம் ஹாம் பஹிரிஷிப்பிய ஸ்வதா, ஓம் ஹாம் ஆஜ்யபாய ஸ்வதா, ஓம் ஹாம் சோமாய ஸ்வதா.

## பிரேதபித்ருேன். (16)

ஓம் ஹாம் பித்ருப்பிய ஸ்வதா, ஓம் ஹாம் பிதாமகாய ஸ்வதா, ஓம்ஹாம் பிரபிதாமகாய ஸ்வதா, ஓம் ஹாம் விருத்த பிரபிதாமகாய ஸ்வதா, ஓம் ஹாம் மாதுர்ப்பிய ஸ்வதா, ஓம் ஹாம் பிதாமகிப்பிய ஸ்வதா, ஓம் ஹாம் பிரபிதாமகிப்பிய ஸ்வதா, ஓம் ஹாம் விருத்

தப்பிரபிதா மகிப்பிய ஸ்வதா, ஓம் ஹாம் மாதாமகாய ஸ்வதா, ஓம் ஹாம் மாது: பிதாமகாய ஸ்வதா, ஓம் ஹாம் மாது: பிரபிதாமகாய ஸ்வதா, ஓம் ஹாம் மாது: விருத்தபிரபிதாமகாய ஸ்வதா, ஓம் ஹாம் மாதாமகிப்பிய ஸ்வதா, ஓம் ஹாம் மாது: பிதாமகிப்பிய ஸ்வதா, ஓம் ஹாம் மாது: பிரபிதாமகிப்பிய ஸ்வதா, ஓம் ஹாம் மாது: விருத்தபிரபிதா மகிப்பிய ஸ்வதா.

## ஆசாரியாதி (12)

ஓம் ஹாம் ஆசாரியப்பிய ஸ்வதா, ஓம் ஹாம் ஆசாரிய பத்தினிப்பிய ஸ்வதா, ஓம் ஹாம் குருப்பிய ஸ்வதா, ஓம் ஹாம் குருபத்தினிப்பிய ஸ்வதா, ஓம் ஹாம் ஞாதிப்பிய ஸ்வதா, ஓம் ஹாம் ஞாதி பத்தினிப்பிய ஸ்வதா, ஓம் ஹாம் சகீப்பிய ஸ்வதா, ஓம் ஹாம் சகீபத்னிப்பிய ஸ்வதா, ஓம் ஹாம் அமாத்தியப்பிய ஸ்வதா, ஓம் ஹாம் அமாத்திய பத்தினிப்பிய ஸ்வதா, ஓம் ஹாம் சர்வைகி ஸ்வதா, ஓம் ஹாம் சர்வேப்பிய ஸ்வதா.

## தேவர்கள் பத்து (10)

ஓம் ஹ்ராம் திக்ப்பிய ஸ்வாஹா, ஓம் ஹ்ராம் திக்பதிப்பிய ஸ்வாஹா, ஓம் ஹ்ராம் கிரகேப்பிய ஸ்வாஹா, ஓம் ஹ்ராம் நக்ஷத்திரேப்பிய ஸ்வாஹா, ஓம் ஹ்ராம் சித்தேப்பிய ஸ்வாஹா, ஓம் ஹ்ராம் கெம் கணபதயே ஸ்வாஹா, ஓம் ஹ்ராம் ஸௌம்கந்தாய ஸ்வாஹா, ஓம் ஹ்ராம் சிவசூரியாய ஸ்வாஹா, ஓம் ஹ்ராம் தேவி ஸ்வாஹா, ஓம் ஹ்ராம் ஹௌம் ஹம் சிவாய ஸ்வாஹா.

அந்தம்—மந்திரமுடிந்த இடம். மந்—மனது. திரம்—ஒடுங்குதல். மனதை ஒடுக்குமிடம் மந்திரமெனப்படும். விசேஷ தர்ப்பணஞ்செய்ய இயலாதவர்கள் சங்கிதா மந்திரங்களுக்குமட்டும் தர்ப்பிக்க.

திருச்சிற்றம்பலம்.

---

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# மானதபூசையென்னுந் தியானம்.

அனுஷ்டானம் முடித்து சிவாலயத்தில் சென்று விதிப்படி விநாயகர்முதல் சண்டிகேஸ்வரர்வரை தரிசித்து பிரதக்ஷணம், நமஸ்காரம், பிராணாயாமம், கரநியாசம், அங்க நியாசஞ்செய்து மூலமந்திரத்தை 1008 அல்லது 508, 258, 108 என்னும் கணக்களவுகொண்டு மானதமாகச் செபித்து சிதேந்திரியனாய் தனித்திருந்து இருதயமாகிய கர்ப்பகிரகத்தில் ஆணவமலமாகிய தடாகத்தில் கன்மமலமாகிய சேற்றில் மாயாமலமாகிய கிழங்கு. நிறம்—மாணிக்கம். உந்திக்குக்கீழ் தாமரைக் கிழங்கு. அதுவே. பிருதிவிதத்துவ மென்றும், அதற்கு மேல் இதமக்குழிக்குக்கீழ் எண் விரலளவைத் தாமரை நாளமென்றும், நாளம் நீலநிறம் அதனின்றும் வரிசையாய் மேலே அப்பு, தேயு, வாயு, ஆகாயம் ஆக பூதம் ரு. சப்த, பரிச, ரூப, ரச, கந்தம் என்னும் தன்மாத்திரை

ரு. சோத்திரம், தொக்கு, சக்ஷு, ஜிங்வை, ஆக்கிராணம் ஆகஞானேந்திரியம் ரு. வாக்கு, பாதம் பாணி, பாயு, உபத்தம் ஆககன்மேந்திரியம் ரு. மனம், புத்தி, அகங் காரம், சித்தம் ஆககரணம் ச. ஆக ஆன்மதத்துவம் உசம் ாளம். பிரகிருதி என்னும்மாயை கிரந்திவடிவம். அசுத் தமாயை அடியிதழ். சுத்தமாயை மேலிதழாயிருக்கப் பட்ட எட்டிதழ்களும் பன்னிரண்டங்குல நீளமும் நாலங்குல அகலமும் வெள்ளை நிறத்தையுமுடைய தளத்தில் கிழக்கில், காலம், அணிமா, அனந்தன், வாமை, ஓம். தென்கிழக்கில், நியதி, மகிமா, சூட்சுமன், ஜேஷ் டை, சி. தெற்கில், கலை, இலகிமா, சிவோத்தமன், இரௌத்திரி, வா. தென்மேற்கில் வித்தை, கிரிமா, ஏக நேத்திரன், காளி, ய. மேற்கில், இராகம், பிராப்தி, ஏக ருத்திரன், கலவிகரணி, ந. வடமேற்கில், புருடன், பிரா காமியம், திரிமூர்த்தி, பலவிகரணி, மோ. வடக்கில், மாயை, ஈசத்துவம், ஸ்ரீகண்டன், பலபிரமதனி, ந. வட கிழக்கில், சுத்தவித்தை, வசித்துவம், சிகண்டினி, சர்வ பூததமனி, மா. இப்படி தத்துவ முதலியவைகள் எட் டிதழ் வடிவமென்றும், ஈசுவர தத்துவம், சதாசிவ தத்

துவயிரண்டும் பொன்னிறமான பொகுட்டு வடிவம். பொகுட்டைச் சுற்றிலுமுள்ள சிவப்புநிறமுள்ள அறுபத்துநான்கு கேசரங்களே, 64 கலைக்ஞானம். கேசராக்கிரம் வெண்மை. சத்தி தத்துவம் பொகுட்டு விருத்தம் அக்கரம். நுமக-ம் மஞ்சள் நிறமான விதையென்றும், இதற்குமேல் சிவதத்துவம் வட்டபீடம். அதன்மேல் ஆன்மா எட்டங்குலபிரமாணத்தில் ஸ்படிகலிங்கசொரூபமாய் விளங்குவதாய்க்கண்டு தாமரைக்கிழங்கு நாளமுதலியவை நகாரமென்றும் தளம் பொகுட்டு வடிவம் முதலியது மகாரமென்றும், இலிங்கம் யகாரமென்றும், இலிங்க உச்சி சிகாரம் அடி வகாரமென்றும், இப்படி தூலபஞ்சாக்கரத்தமைந்த சூக்குமவடிவென்றுங் கண்டு தெளிந்து இதன்முன்பாக சொர்ணாசனமும் அதன்மேல் கீழ்க்கடையில் சொர்ண கடகத்தில் அபிடேகத் திருமஞ்சனம் ஸ்ரீகண்ட பரமசிவன் சடையிலிருந்து கங்கைநிறையப் பெற்றிருப்பதாகவும், அதன் மேற்கே சொர்ணகலசமும் அதன்மேற்கே பொறுமையாகிய அர்க்கிய பாத்திரமும் அதன்மேற்கே உயர்ந்த பத்திர புஷ்பமுதலியனவும் அதன்மேற்கே பஞ்சாமிர்தமாகிய

சந்தனாதி தைலமுதலாகிய அபிடேகத் திரவியங்களும் தூபதீப நைவேத்திய முதலிய பூஜோப கரணங்களும் தயாராயிருப்பதாகப் பாவித்து, சொர்ண கடகத்தில் மூலத்தால் எழுதர மர்ச்சித்து, அபிமந்திரித்து கர்த்தாவினது நிறைவையு மந்நிறைவிலே ஆன்ம நிறைவையும் பாவிக்கவும். அர்க்கிய பாத்திரத்தை வௌசடந்த மூலத்தால் சுத்திசெய்து மூலத்தால் அமிர்தமாகிய ஜலம்பூரித்து விபூதி சந்தன புஷ்பமிட்டு பதினொருதரம் அர்ச்சித்தபி மந்திரித்து தன்னையும் பூசாத்தானம் திரவிய முதலானதையும் மூலத்தால் புரோக்ஷித்து பஞ்சசுத்தி செய்க.

பூதசுத்தி:—பஞ்சபூதபரிணாம வடிவான தேகத்தில் உவர்ப்புற்றிருந்து அஷ்டமூர்த்தங்களைத் தரிசித்தல். ஆன்மசுத்தி:—ஞானசொரூபமாயிருக்கிற கர்த்தாவை பூஜிக்கிறதற்கு ஆன்மாவிற்கு சுதந்திரஞானமில்லை ஆகையால் பதிஞானத்தைப்பொருந்தி அந்த ஞானத்திலேயமுந்தியிருத்தல். தான சுத்தி:—விஞ்ஞானமயகோச முதல் ஐவகைக் கோசங்களை நீக்கி தத்

சொரூபத்தைத் தரிசித்தல். திரவியசுத்தி:—விடயங்களி லாசையின்றிநின்றுசிவபிரான்எல்லாத்திரவியங்களிலும் கலந்து நிற்றலைத்தரிசித்தல். மந்திரசுத்தி:-நகரமகரங்களை நீக்கி யகரத்தை வகரத்தோடுசேர்த்து சிவத்தைத் தரி சித்தல். இலிங்கசுத்தி:—சிவபிரான் எங்கணும் நிறைந்த தாயும் அனுபவத்தாலறியப்படுபவராகப் பாவித்தல். பின்பு ஆன்மலிங்கத்தினடியில் தாமரைப் பொகுட்டின் மேல் தத்துவநியதிகளைந்து தனித்திருக்கும் உயிராகிய ஆன்மாவைச் சிவாசனமாகவும் மூலாதாரத்திலிருந்து பிரம்மத்தியாகம் விஷ்ணுத்தியாகம் உருத்திரத்தி யாகம் ஈசுவரத்தியாகம் சதாசிவத்தியாகம்செய்து துவாதசாந்தத்திலுள்ள ஜோதியைக்கண்டு சோஹம் பாவனைபண்ணி நிஷ்களரும், நின்மலரும், பரமகல் யாணரும், சதாநந்தரும், நித்தியரும், தேஜோரூபரும், பாசங்களாலழிவு படாதவரும், சர்வவியாபகரும், தோய்வில்லாதவரும், சிவஞானமே திருமேனியாக வுடையவருமான மூர்த்தியை படிகலிங்கத்துளாவா கித்து எல்லாவற்றிற்கும் மேலாகிய முடிவாயிருக் கிற பேரானந்தத்தை மூலமாகக்கருதி அர்ச்சித்து

திருவடி, திருமுகம், திருமுடி, ஞானமாகக் கற்பித்து பாத்தியாசமனார்க்கியங்கொடுத்து தூப தீபங்காட்டி புஷ்பங்கழித்து சந்தனாதி தைலம்முதல் சந்தனக் குழம்புவரை அபிடேகித்து திருவொற்றாடை சாத்தி பட்டு, கௌபீனம், உத்தரீயம், ஆபரணம், இண்டை மாலை முதலியனசாத்தி புஷ்பஞ்சாத்தி அர்ச்சிக்கும் படி கொல்லாமை, ஐம்பொறியடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்னும் அட்டபுஷ்பங்களை மூலத்தாலர்ச்சித்து மனமாகிற பாத்திரத்தில் பிராணனாகிற அக்கினியையிட்டு கர்வமென்னும்தசாங்கம்போட்டு தூபங்கொடுக்கவும், அஞ்ஞானத்தழுந்தாது ஞானப்பிரகாசத்தைத்தீபங்காட்டவும், இந்திரியவழியேசென்ற மனதை அவ்வழிசெல்லாது அடக்குதலை நைவேத்தியமாகக் கருதி நிவேதித்து, ஞானத்தைக் கற்பூரமாகப்பாவித்து நீராஞ்சனம் செய்து, செபித்து தத்தம்பண்ணி தோத்திரம பிரதக்ஷணம் நமஸ்காரமுதலியவை செய்யவும். ஓமஞ் செய்யும் விதம்:—உந்திக்குக்கீழ் மூலாதாரத்தில் சுத்த மாயாஸ்வரூபமாயுள்ள அட்டகோண ஓமகுண்டமாக

வும் இச்சாஞானகிரியாசத்திகள் மூன்று மேகலையாக வும் ஞானத்தை அக்கினியாகவும் அஸ்தியைச் சமித் தாகவும் பரமாமிர்தம் நெய்யாகவும் மூலாதாரம் நெய்த் தாலியாகவும் இடாநாடி சுழுமுனைநாடி சிருக்குசிருவங் களாகவும் பிரபஞ்சத்தை திரவியமாகவும் பாவித்து மூலமுச்சரித்து அக்கினியை சமித்துக்களால் மூடி ஜ்வலிப்பித்து சிருவத்தால் நெய்யெடுத்து ஆஹுகுதியும் திரவியத்தால் ஆஹுகுதியும் சிருக்கில் நெய்யெடுத்து சிருவத்தால் மூடி மூலத்தால் பூர்ணாகுதியுஞ்செய்து தூபதீப முதலியனசெய்யவும் ஓமகுண்டம் சூட்சுமான் மாவாகவும் அக்கினி அதிசூட்சும சத்தியாகவும் அதன் கூடு அந்தர்யாமியாகிய சிவமாகவுங்கண்டு பஞ்சாக் கரத்தாலர்ச்சிக்க

தியானம் செய்தல்:—புருவநடுவில் ஆன்மாவாகிய இரத்தின சிம்மாசனத்தின்மீது ஞானப்பிரகாசமான ஜோதிலிங்கமிருப்பதாகப் பாவித்து ஜோதிலிங்கத்தில் மனதையும் பிராணனையும் புறத்திலே செல்லாமல்சேர்க் கவேண்டும். அந்தத்தியானத்தினால் மனதைச் சிறிது

சிறிதாக லயப்படுத்தவும். மனம் லயமடையவே சித்தம் நஷ்டமாகும். ஞானானந்தம் தானே பிரகாசிக்கும். நிஷ்டை:—அகம் புறம் என்று எண்ணாமலே எங்கணும் ஏக நிலையாய்க்கண்டு இறை நிறைவிலழுந்துவதாகிய சிவோஹம் பாவனை செயலறுதியில் நிற்பது சைவசித்தாந்தம்.

சிவப்பிரகாச குருவே நம:

திருச்சிற்றம்பலம்.

---

உ.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## தோத்திரம்.

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
யோது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத னாம நமச்சி வாயவே.

இலங்கை யரக்கர் தமக்கிறையே
யிடந்து கயிலை யெடுக்கிறையே
புலன்கள் கெடவுடன் பாடினனே
பொறிகள் கெடவுடன் பாடினனே
இலங்கிய மேனியி ராவணனே
யெய்து பெயருமி ராவணனே
கலந்தருள் பெற்றது மாவசியே
காழி யரனடி மாவசியே.

நானேயோ தவஞ்செய்தேன்
சிவாயநம வெனப்பெற்றேன்
றேனாயின் னமுதமாய்த்
தித்திக்குஞ் சிவபெருமான்
றானேவந் தெனதுள்ளம்
புகுந்தடியேற் கருள்செய்தா
னூனாரு முயிர்வாழ்க்கை
யொறுத்தன்றே வெறுத்திடவே.

உடையா ளுன்ற னடுவிருக்கு
முடையா ணடுவு ணீயிருத்தி
யடியே னடுவு ளிருவீரு
மிருப்ப தானா லடியேனுன்

னடியார் நடுவு ளிருக்குமரு
ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து
முடியும் வண்ண முன்னின்றே.

பந்தமும் பிரிவுந் தெரிபொருட் பனுவற்
படிவழி சென்றுசென் றேறிச்
சிந்தையுந் தானுங் கலந்ததோர் கலவி
தெரியினுந் தெரிவுரு வண்ண
மெந்தையுந் தாயும் யானுமென் றிங்ங
னெண்ணில்பல் லூழிக ளுடனாய்
வந்தனு காது நணுகியுள் கலந்தோன்
மருவிடந் திருவிடை மருதே.

நிட்டையிலா வுடனீத் தென்னை யாண்ட
நிகரிலா வண்ணங்களுஞ்
சிட்டன் சிவனடி யாரைச்சீ ராட்டுந்
திறங்களு மேசிந்தித்
தட்ட மூர்த்திக்கென் னகநெக வூறு
மமிர்தினுக் காலநிழற்
பட்டனுக் கென்னைத்தன் பாற்படுத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள
வளப்பருங் கரணங்க ணான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந்
திருந்துசாத் துவிகமே யாக
விந்துவாழ் சடையா னாடுமா னந்த
வெல்லையி றனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துட் டிளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

இந்த அருட்பாக்களால் பஞ்சாக்கரபேதங்களை யுணர்க.

மெய்கண்டதேவன் றிருவடி வாழ்க.

திருச்சிற்றம்பலம்.

---

சைவானுஷ்டானவிளக்கம்,

முற்றிற்று.

---

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௰ | ௪ | சவன | சலன |
| 6 | 9 | ஜலத்தைத | ஜலத்தைத் |
| 12 | 3 | அத்தும | ஆத்தும |
| 13 | 16 | தனவியாபக | தன்வியாபக |
| 16 | 17 | ஆன்மாக்களை | ஆன்மாக்கள் |
| 17 | 17 | ஐஸ்வரியங | ஐஸ்வரியங் |
| 26 | 7 | கவசாய | ஓம்ஹெறம் கவசாய |
| 27 | 10 | மூர்த்தயே | மூர்த்தனி |
| 41 | 6 | அருள் | அருட் |
| 48 | 3 | மருத்தப்பிய | மருத்ப்பிய |
| ,, | 13 | மானுஷர் | மானுடர் |
| ,, | 14 முதல் 17 வரை | வௌஷட் | வஷட் |
| ,, | 18 | இரஷபாயவௌஷட் | விரஷபாயவஷட் |
| 52 | 10 | கிரகததில் | கிரகத்தில் |
| ,, | 15 | நீறம் | நிறம் |
| 54 | 12 | சிகாரம் | சிகாரமென்றும் |
| 55 | 2 | தைலமுதலாகிய | த்தைலமுதலிய |
| 56 | 7 | நிறைந்ததாயும் | நிறைந்தவராகவும் |
| ,, | 7 | படுபவராகப் | படுபவராகவும் |
| 57 | 4 | சந்தனுதி | சந்தனுதித் |
| ,, | 7,8 | அர்ச்சிக்கும்படி | அர்ச்சிக்க |
| ,, | 10 | புஷ்பங்களை | புஷ்பங்களைக்கொண் |
| ,, | 14 | சென்ற | செல்கின்ற [டு |
| 60 | 12 | னமுதமாய்த | னமுதமாய்த் |

168631

உ

சிவமயம்.

# அறிவிப்பு.

---

1. சைவானுஷ்டான விளக்கம்:—முறைப்படி கிரியாவிளக்கத்துடன் அதற்குரிய முத்திரைகள், மந்திரங்கள், தியானாதிகளுடன் யாவரும் எளிதில் உணர்ந்து கொள்ளுமாறு தெளிவாக ஸ்ரீமத். சுப்பிரமணிய தேசிகர் அவர்களால் இயற்றப்பெற்றது. விலை அணா 6.

2. மதுரை யென்னுந் திருவாலவாய் மான்மியம்:- அஷ்டமிப்பிரதக்ஷண வரலாறும், 64 திருவிளையாடல்களின் சுருக்கமும், 12 மாதங்களிலும் நடைபெறுகிற உத்ஸவாதி விவரங்களும் அடங்கியது. விலை அணா 2.

3. சைவசமயம்:—சைவசமயம், சைவசமயிக்குரிய இலக்கணங்கள், பதினாறுபேறு, திருக்கோயிலிலும் திருவீதியிலும் செய்யத்தகாத குற்றங்கள் முதலியன அடங்கியது. விலை அணா 1.

கிடைக்குமிடம்:—

S. கலியாணசுந்தரம் பிள்ளை,
ஸ்ரீ குமரன் திருவருட் சங்கம் அதிபர்,
மேலமாசிவீதி, மதுரை.

---

9A
6-11D